பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 20 திங்கட்கிழமை (04-03-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:99

### அமைதிக்கான சமாதான முயற்சி பிழைத்தால்

# எந்த நெருக்கடிக்கும் முகங்கொடுக்க படையினர் தயாராக இருக்கவேண்டும்!

## பருத்தித்துறை படைமுகாமில் சிப்பாய்கள் மத்தியில் மாரப்பன உரை

கொழும்பு,மார்ச்4

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் வெற்றி பெறும் என்று அரசு திடமாக நம்புகின்றது. ஒருவேளை அந்த நம்பிக்கை பிழைத்துப் போனால் அதனால் உருவாகக் கூடிய எத்தகைய நெருக்கடிகளுக்கும் முகங்கொடுக்கப் படையினர் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன.

முப்படைத் தளபதிகள் சகிதம் நேற்று குடாநாட்டுக்கு விஜயம் செய்த பாதுகாப்பு அமைச்சர் பருத்தித்துறையில் படைமுகாம் ஒன்றில் சிப்பாய்கள் மத்தியில் உரையாற்றிய போது இதனைத் தெரிவித்தார்.

தளபதிகள் சகிதம் நேற்றுக்காலை பலாலிக்கு வந்தடைந்த மாரப்பன, அங்கு படை அதிகாரிகளுடன் மாநாடு ஒன்றை நடத்தினார். யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் லால் விஜேசூரியவுடன் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக ஆராய்ந்தார். பின்னர் காங்கேசன்துறைக்குச் சென்று அவர் காங்கேசன்துறைத் துறைமுகத்தையும் கடற்படைத் தளத்தையும் பார்வையிட்டார். அங்கு இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலீஸ் ஆகிய

(10ஆம் பக்கம் பார்க்க)



### இந்தியாவில் இரு தினங்கள் தேசிய துக்கம்

ஹைதராபாத்,மார்ச்4

ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த சபாநாயகர் பாலயோகியின் மறைவுக்கு மரியாதை செலுத்தும் வகையில் நாடு முழுவதும் இருநாள் தேசிய துக்கம் அனுஷ்டிக்கப்படும்

(10ஆம் பக்கம் பார்க்க)

### உடன்படிக்கை இன்று நாடாளுமன்றத்தில்!

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் இடம்பெறவிருக்கிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக விவாதிப்பதற்கு நாடாளுமன்றத்தின் விசேட கூட்டம் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

உடன்படிக்கை விவாதத்துக்கு வரும்போது சபையில் காரசாரமான விவாதங்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

உடன்படிக்கையை விவாதத்துக்கு எடுக்குமாறு எதிர்க்கட்சித்தலைவர் அரசிடம் கோரியிருந்தது தெரிந்ததே.

### வடக்கு - கிழக்கில்

# உள்ளூராட்சித் தேர்தல் நடக்குமா? நடக்காதா?

## திரிசங்கு நிலையில் தமிழ்க்கட்சிகள்

கொழும்பு,மார்ச்4

**வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் முன்னர் அறிவிக்கப்பட்டபடி மார்ச் 25 ஆம் திகதி நடைபெறுமா அல்லது தமிழ்க்கட்சிகள் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பது போன்று அது ஒத்திவைக்கப்படுமா?**

**இந்த விடயம் குறித்து இன்னமும் திட்டவட்டமான முடிவு எதுவும் எடுக்கப்படாததால் குழப்பநிலை நீடிக்கின்றது. தேர்தல் நடக்குமா நடக்காதா என்பது தெரியாமல் தமிழ்க்கட்சிகள் திரிசங்கு நிலையில் உள்ளன.**

இந்தத் தேர்தல்களை வடக்கு - கிழக்கில் ஒத்திவைக்கும்படி பெரும்பாலான தமிழ்க்கட்சிகள் அரசை வற்புறுத்தி வந்தன.

அதற்குக் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்த அரசு, தேர்தலகளை ஒத்திவைப்பதற்கு வழி செய்யும் விதத்தில் உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வந்தது. அந்தச் சட்டத்திருத்தத்தின் கீழ் உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு கிடைத்துள்ளது.

இந்த நிலையில் தேர்தல் ஆணையாளர் வடக்கு - கிழக்கில் இத்தேர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ராஸீக் குழு உறுப்பினர் கிரனேட் வீசித் தாக்குதல்!

### களுவாங்கேணியில் பதற்றம்

மட்டக்களப்பு,மார்ச்4

இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க் குழு ஒன்றைச் சேர்ந்த துணைப்படை உறுப்பினர் ஒருவர் தனிப்பட்ட பகை காரணமாக நடத்திய குண்டுத் தாக்குதலில் இளைஞர் ஒருவர் கண் மோசமாகச் சேதமுற்ற நிலையில் படுகாயமடைந்தார்.

மட்டக்களப்பு களுவாங்கேணியில் நேற்றுமாலை 6.45 மணியளவில் இந்தக் குண்டு வீச்சுச்சம்பவம் இடம்பெற்றது.

படுகாயமடைந்த வைரமுத்து சிவஞானம் (வயது 38) என்ற கடற்றொழிலாளி மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். ராஸீக் குழுவைச் சேர்ந்த ஒருவரே கிரனேட்டை வீசித் தாக்கியதாகக் கூறப்படுகிறது. இந்தக் குண்டு வெடிப்பால் அந்தப் பிரதேசம் அதிர்ந்தது. களுவாங்கேணிப் பகுதியில் நேற்றிரவு பதற்றம் நிலவியது. (ஐ)

## உடன்பாட்டை மதிப்பிட நாடாளுமன்றக் குழு

### கட்சிகள் கூடி நியமிக்கலாம்

கொழும்பு,மார்ச்4

அரசு - விடுதலைப் புலிகள் உடன்படிக்கை தொடர்பாக மதிப்பீடு செய்வதற்கான ஒரு குழுவை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளே நியமிக்கலாம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சமசமாஜக் கட்சி பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோனிடம் இவ்வாறு யோசனை தெரிவித்திருக்கிறார்.

உடன்படிக்கை தொடர்பாக நாடாளுமன்றம் ஒரு குழுவை நியமிக்க வேண்டும் என்று கோரி பட்டி வீரக்கோன் முன்னர் பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

அக்கடிதத்துக்கான பதில் கடிதத்திலேயே பிரதமர் ரணில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்

(10ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கில் இருந்து படைகள் வாபஸ் இல்லை!

## மல்வத்தை மகாநாயக்கரிடம் பிரதமர் உறுதி

கொழும்பு,மார்ச்4

வடக்கு - கிழக்கிலிருந்து அரசுத துருப்புக்கள் எக்காரணம் கொண்டும் வாபஸ் பெறப்படமாட்டா. தற்போதைய படை நிலைகள் பலப்படுத்தப்பட்டு துருப்புக்கள் உஷார் நிலையில் வைத்திருக்கப்படும்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மல்வத்தை பீடாதிபதி ரமபுக்வெல ஸ்ரீ விபஸ்ஸி மகா நாயக்க தேரரிடம் உறுதியளித்திருக்கிறார். கண்டியில் நேற்றுமுன்தினம் மாலை பிரதமர் மகாநாயக்கரைச் சந்தித்துப் பேசினார்.

புலிகளுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் வடக்கு - கிழக்கிலிருந்து அரசுத் துருப்புக்கள் வாபஸ் பெறப்படும் சாத்தியம் இருக்கிறதா என்று மகாநாயக்கர் வினாவினார். இதற்குப் பதிலளித்த போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு - கிழக்கில் படையினரின் உஷார்நிலையை எந்தநேரமும் பேணும்படி தேரர் பிரதமரைக் கேட்டுக்கொண்டார்.

நாட்டுக்கும் நாட்டின் சமாதானத்துக்கும் இது இறுதிச் சந்தர்ப்பம்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயை இங்கு அழைத்தவர் ஜனாதிபதி குமாரதுங்கதான்!

### அமைச்சர் லொக்கு பண்டார பேட்டி

கொழும்பு,மார்ச்4

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாட்டாளராகப் பணியாற்ற நோர்வேயை முதலில் அழைத்தது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுதான். அது ஆரம்பித்த திட்டத்தையே விட்ட இடத்தில் இருந்து நாங்கள் தொடர்கின்றோம்.

- இவ்வாறு தெரிவித்தார் நீதி அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் புலிகளின் தலைவர் வே.

(10ஆம் பக்கம் பார்க்க)

## தரைப்பாதை திறக்க இராணுவத்துக்கு மூன்றரைக் கோடிரூபா தேவையாம்!

### மகேஸ்வரனுக்கு படை அதிகாரிகள் விளக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்4

குடாநாட்டிலிருந்து தென்பகுதிக்குச் செல்வதற்கான ஏ-9 நெடுஞ்சாலையைத் திறப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு தமக்கு மூன்றரைக் கோடிரூபா தேவை என்று யாழ்.பாதுகாப்புப் படைத்தலைமை அரசிடம் கோரியுள்ளது.

பலாலியின் குடாநாட்டுப் படை அதிகாரிகளைச் சந்தித்துப் பேசிய பின்னர் இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் இந்தத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார். எழுது

(10ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகள் தமிழர்களால் மனப்பூர்வமாக வரவேற்கப்படுகின்றன

## இந்துமத குருமார் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்4

யுத்தநிறுத்த அறிவிப்பும், சமாதான முயற்சிகளும் தமிழ்பேசும் மக்களால் மனப்பூர்வமாக வரவேற்கப் படுகின்றன.

- இவ்வாறு தெரிவித்துள்ளது சர்வ தேச இந்துமத குருமார் ஒன்றியம்.

கடந்த மாதம் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சமாதானப் பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி தெரிவித்து மேற்படி குருமார் ஒன்றியம் பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளது. அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் நடைபெற்ற சமாதானத்துக்கான பாதயாத்திரைப் பேரணி மிகவும் அமைதியாகவும் உணர்வுபூர்வமாகவும் நிறைவுபெற்றிருப்பதில் நாம் திருப்தி அடைகின்றோம்.

சர்வமத நிறுவனங்களின் விருப்பப்படி, மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பாதயாத்திரையானது இன, மத பேதமற்றமுறையில் நாட்டு மக்கள் அனைவரும் சாந்தியும் சமாதானமும் நிறைந்த வாழ்வையே விரும்புகின்றனர் என்பதையும், அதற்கான தீர்வுத் திட்டத்தையும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர் என்பதையும் அகில உலகுக்கும் வெளிப்படுத்தியுள்ளன.

இப்போது எடுக்கப்பட்டிருக்கும் யுத்தநிறுத்த முடிவுகளும், சமாதான முயற்சிகளும் நாட்டுமக்களால், குறிப்பாகத் தமிழ்பேசும் மக்களால் வரவேற்கப்படுகின்றன என்பதை அவதானிக்க முடிகிறது.

ஆனால் - வரலாறு தந்த பாடம் மக்களிடையே இன்னமும் இந்த சமாதான முயற்சிகள் பற்றிய நம்பிக்கையின்மையை உண்டாக்குகின்றது என்பதையும் இந்தப் பாதயாத்திரை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது என்பதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

உலக நாடுகளுக்கும், முக்கியமாக இலங்கை அரசுக்கும் நமது நோக்கத்தை - எதிர்பார்ப்பைத் துலாம்பரமாக எடுத்துக்காட்டும் வகையில் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து இருதினங்களிலும் திரண்டு வந்து பாதயாத்திரையில் கலந்துகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும், அதனை நெறிப்படுத்திய மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தினருக்கும் அனைத்து மதத் தலைவர்கள் சார்பிலும் நமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மடவளை படுகொலைகள் வழக்கு மீண்டும் இன்று விசாரணைக்கு

கொழும்பு,மார்ச்4

மடவளை முஸ்லிம் இளைஞர்கள் படுகொலைகள் தொடர்பான வழக்கு விசாரணை இன்று மீண்டும் நடைபெறும்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த உட்பட சந்தேக நபர்கள் இன்று தெல்தெனிய நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர்.

சானுக்க ரத்வத்த, லொஹான் ரத்வத்த உட்பட சில சந்தேக நபர்கள் இன்று அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்தப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## தேவாரப் பாடசாலை ஒன்று குடாநாட்டில் நிறுவப்படும்

யாழ்ப்பாணம்,மார்ச்4

யாழ்.குடாநாட்டில் தேவாரப்பாடசாலை ஒன்றை நிறுவுவதற்கும் -

அந்தப் பாடசாலை மூலம் ஓதுவார் மூர்த்திகளுக்குப் பயிற்சி அளிக்கவும் ஒழுங்குகள் செய்துதரப்படும்.

- இவ்வாறு அகில இலங்கை திருமுறைமன்ற உறுப்பினர்களிடம் உறுதி அளித்துள்ளார் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்.

மேற்படி மன்றத்தின் செயற்குழு ஒன்று அண்மையில் அமைச்சரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது. இந்தச் சந்திப்பில் அமைச்சர் தி.மகேஸ்வரன் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் தேவாரப்பண்ணிசைப் பயிற்சி, சைவ சமய பாடம் போன்றவற்றை ஆரம்பிக்க முன்வரவேண்டும். இதற்கான முழு ஆதரவையும் இந்து கலாசார அமைச்சு வழங்கும்.

தேவாரப் பாடசாலை சிறந்த முறையில் இயங்குவதற்கு சகல வளஆளணியினரின் ஆதரவு பெறப்படும். குறிப்பாக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேராசிரியர்கள், இசை வல்லார்கள் ஆகியோரின் உதவிகள் பெறப்படும் - என்றார் அமைச்சர்.

இந்தச் சந்திப்பில் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி, காப்பாளர் கு.கங்கைவேணியன் ஆகியோர் பங்கு கொண்டனர். (ம-7)

### தென்மராட்சியில்

## கோவில் குடியிருப்புப் பகுதிக்கு செல்ல மக்களுக்கு அனுமதியில்லை

தென்மராட்சி,மார்ச்4

சாவகச்சேரிப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேளையில் நேற்று தமது வீடுகளை துப்புரவு செய்வதற்குச் சென்ற கோவில்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பொதுமக்களை அங்கு செல்லவிடாமல் படையினர் திருப்பி அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரிக்கு வருகை தந்திருந்த அமைச்சர் தி.மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் ஆகியோருக்கு இவ்விடயம் தொடர்பாக பொதுமக்களால் முறையிடப்பட்டது. எனினும் அப்பகுதிக்கு பொதுமக்கள் செல்வதற்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் நண்பகல் வரை காத்திருந்து விட்டு திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியின் ஒருபகுதி சிரமதானம் மூலம் நேற்றுத் துப்புரவு!

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை நேற்று ஞாயிற்றுக்கிழமை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரியில் சிறு சேதங்களுக்கு உள்ளாகியுள்ள மார்பு நோய் சிகிச்சைப் பிரிவு மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகிய இரு கட்டடங்களின் சுற்றாடல்களே துப்புரவு செய்யப்பட்டன.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜின் அனுசரணையுடன் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் இந்த சிரமதானத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆஸ்பத்திரியின் இரண்டாம், ஐந்தாம் வார்ட்டுகள் தவிர்ந்த ஏனைய வார்ட்டுகளும் வெளி நோயாளர் பிரிவு, ஆஸ்பத்திரி அலுவலகம், விடுதிகள் அனைத்தும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன. பல கட்டடங்கள் கற்குவியலாகக் காணப்படுகின்றன.

நேற்றைய சிரமதான நிகழ்வில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ந.இரவிராஜ், சாவகச்சேரி பிரதேச சபை தலைவர் அன்ரன் பொன்னையா ஆகியோருடன் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.பி.டி.பி, புளொட் ஆகியவற்றின் உறுப்பினர்களும் தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை, கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் விவசாய அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், யாழ்.பிராந்திய மலேரியா தடை இயக்க பொறுப்பதிகாரி டாக்டர் தா.சிவபாதம் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி செ.யமுனாநந்தா உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டனர். (ம-117)

## நவக்கிரியில் மீட்ட சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,மார்ச்4

நவக்கிரி நிலாவரையிலிருந்து நேற்றுமுன்தினம் அழுகி சேதமடைந்த நிலையில் மீட்கப்பட்ட சடலம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இனம் காணும் பொருட்டும், மரண விசாரணையின் நிமித்தமும் சடலம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-15)

## கிளிநொச்சிப் பகுதி வரை கண்டி வீதி திருத்தப்படும்

### ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன்

வவுனியா,மார்ச்4

கண்டி வீதியை ஓமந்தையிலிருந்து கிளிநொச்சிவரை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

நாளையும் நாளைமறுதினமும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் வவுனியாவுக்கு விஜயம் செய்யவுள்ளனர். அந்த விஜயத்தின் போது இந்த வீதியைத் திருத்துவதற்கான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கோருவதுதென்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையான பாதை தற்போது திறக்கப்பட்டுள்ளது. அதில் வவுனியா - புளியங்குளம் வரையான பாதை ஓரளவு நல்ல நிலையில் உள்ளது. புளியங்குளம் - மாங்குளம் வரையான பாதை கடும் சேதமடைந்த நிலையில் இருக்கின்றது. மாங்குளம் - கிளிநொச்சி வரையான பாதை முற்றிலும் குண்டும், குழியுமாகக் காணப்படுகின்றது.

கிளிநொச்சியில் இருந்து பளை வரையான கண்டி வீதிப்பகுதியும் இதேமாதிரி சேதமடைந்துள்ளது.

எனவே இவற்றைத் திருத்தி அமைத்து ஏ-9 கண்டி நெடுஞ்சாலையை மக்கள் போக்குவரத்துக்கு தயார்ப்படுத்துவதற்காகவே ஆசிய வங்கியின் உதவியை நாடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (ம)

## வடமராட்சியில் பால் விலை அதிகரிப்பு!

நெல்லியடி,மார்ச்4

வடமராட்சி கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தால் பாலின் விலை ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கால்நடைத் தீவினத்தின் விலை யுயர்வு காரணமாக இந்த விலை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளதாகச் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி முதல் இந்த விலை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. புதிய விலைப்படி ஒரு போத்தல் பால் 21 ரூபாவாக விற்கப்படுகின்றது. (ம-9)



யாழ்.செயலகத்தில் உள்ள இந்து கலாசார அலுவலகத்தில் வைத்து வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் சூரிய மின்கலங்களை அண்மையில் வழங்கினார். ஆலய நிர்வாக சபை உறுப்பனர்களான எஸ்.தேவன், எஸ்.பேபி ஆகியோரிடம் சூரிய மின்கலங்களை அமைச்சர் கையளிப்பதையும் அருகில் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் வலி. வடக்கு பிரதேச செயலர் பத்தினியம்மா திலகநாயகம் போல் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம்:பொ.இராஜேஸ்வரன்)*

## 21 உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் ஒத்திவைப்பு!

வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள 21 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டன. தேர்தல்கள் ஆணையாளர் திணைக்களம் இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

குறிப்பிட்ட 21 உள்ளூராட்சி மன்றங்களுக்கான சில வேட்பு மனுக்கள் பிரதேச தெரிவத்தாட்சி அதிகாரிகளினால் பல்வேறு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டிருந்தன.

ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி, பொதுஜன ஐக்கிய முன்னணி, மலையக மக்கள் முன்னணி, ஜே.வி.பி, சிஹல உறுமய, தேசிய ஜனநாயகக் கட்சி, ஸ்ரீல.மு.கா.உட்பட பல சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக்கள் இவற்றில் அடங்கும்.

வேட்பு மனுக்கள் நிராகரிப்பை ஆட்சேபித்து இக்கட்சிகள் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் ஆட்சேப மனுக்களைத் தாக்கல் செய்திருக்கின்றன.

இதுவரை 6 பிரதேச சபைகள் தொடர்பான ஆட்சேபனை மனுக்கள் மீது தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் 15 உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான ஆட்சேபனை மனுக்கள் மீது இன்னமும் தீர்ப்பு வழங்கப்படவில்லை. இதனாலேயே ஆட்சேப மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட 21 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களையும் காலவரையறையின்றி பிற்போட முடிவு செய்யப்பட்டது என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்திருக்கிறார். (ம)

## கஞ்சா வைத்திருந்த பெண் கைது!

சட்டவிரோதமான வகையில் வீட்டில் வைத்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் பெண் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கொடிகாமம் பொலீஸாரினால் நேற்றுமுன்தினம் காலை கைது செய்யப்பட்டார்.

கொடிகாமம் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி சரத் சந்திர தலைமையில் சென்ற பொலீஸ் குழுவினரே, பருத்தித்துறை - கொடிகாமம் வீதியைச் சேர்ந்த சரஸ்வதி யோகராசா (வயது 45) என்ற பெண்மணியை நேற்றுக்காலை கைது செய்தனர்.

குறித்த சந்தேக நபரை கொடிகாமம் பொலீஸார் இன்று மாலை சாவகச்சேரி நீதிவானின் வாசஸ்தலத்தில் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்த சமயம் அவரைஎதிர் வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் அ.பிறேம்சங்கர் உத்தரவிட்டார்.(ம-109)


### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு
22
04
1919



உதிர்வு
03
02
2002

**அமரர் தாமோதரம்பிள்ளை இரத்தினம்**

*(ஓய்வூதியர் - தொழில்நுட்ப போதனாசிரியர்)*

எமது குடும்பத் தலைவரது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும், எம் துக்கத்தில் பங்குகொண்டும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவிபுரிந்த எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (04. 03. 2002) திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு அருகே உள்ள மண்டபத்திலும், வீட்டுக்கிருத்தியம் நாளை (05. 03. 2002) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளன. அன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன அழைக்கின்றோம்.

தகவல்:
இ.ஜெயபாலன் (மகன்),
இலங்கை மின்சார சபை,
பருத்தித்துறை.

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
கும்பவாழியம்பதி,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி

# இந்திய சபாநாயகர் பாலயோகி ஹெலி விபத்தில் உயிரிழந்தார்!

ஹைதராபாத்,மார்ச்4

இந்திய நாடாளுமன்ற மக்களவையின் சபாநாயகர் ஜி.எம்.சி.பாலயோகி (வயது 51) நேற்றுக் காலை ஆந்திர மாநிலம் கோதாவரி மாவட்டம் கைகளூர் அருகே ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்தார்.



ஜி.எம்.சி.பாலயோகி

ஜி.எம்.சி.பாலயோகி பீமாவரம் என்ற ஊரிலிருந்து தனியார் ஹெலிகொப்டர் ஒன்றில் ஹைதராபாத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து நிகழ்ந்தது.

புறப்பட்ட சிறிது நேரத்துக்குள் இயந்திரக் கோளாறு காரணமாக அந்தக் ஹெலி மரமொன்றில் மோதி 'கவண்டனங்கா' குளத்தில் விழுந்ததில் பாலயோகியும் அவருடைய தனி உதவியாளர் கே.எஸ்.ராஜூ மெய்க்காவலர் மற்றும் ஹெலி விமானி ஆகியோர் உயிரிழந்தனர். முதலில் ரயில் மூலமாகச் செல்லவிருந்த பாலயோகி இறுதி நிமிடத்தில் முடிவெடுத்து ஹெலி பயணத்தை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

இந்திய நாடாளுமன்ற அமர்வுகள் சமீபகாலமாக தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்பாவதால் முன்னைய சபாநாயகர்களை விட ஜி.எம்.சி.பாலயோகி மக்களிடையே அதிகம் பிரபலமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

# தலிபான், அல்கெய்டா போராளிகள் அமெரிக்க இராணுவத்துக்கு பதிலடி!

## கூட்டுப் படையினரில் மூவரைக் கொன்றனர்!

காபூல்,மார்ச்4

கிழக்கு ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினர் மேற்கொண்ட தாக்குதலுக்கு அப்பகுதியில் மறைந்திருந்த தலிபான் மற்றும் அல்கெய்டா போராளிகள் பதிலடி கொடுத்துள்ளனர். இதில் ஓர் அமெரிக்கப் படைவீரர் கொல்லப்பட்டார். அமெரிக்க இராணுவத்துடன் இணைந்து பணியாற்றிய 2 ஆப்கானியர்களும்

உலக அரங்கில்

இந்த மோதலில் உயிரிழந்தனர். நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கடந்த டிசெம்பர் மாதம் ஆப்கானிஸ்தானிலிருந்து தலிபான் அரசு அகற்றப்பட்ட பின்னர் அங்கு இடம்பெற்ற மிகப்பெரிய மோதல் இது வென்று கூறப்படுகிறது.

பலம்மிக்க அமெரிக்க ஆலோசனை மற்றும் குண்டுவீச்சு விமானங்களின் துணைஆகியவற்றுடன் முதலில் தாக்குதலைத் தொடங்கிய ஆப்கான் படையினர் தலிபான் போராளிகளின் பதில் தாக்குதலை எதிர்கொள்ள முடியாது பின்வாங்கியதாகவும் -

அதன் பிறகு அமெரிக்க இராணுவத்தினரும் அங்கு சென்று மோதலில் ஈடுபட்டதாகவும் -

கூறப்படுகிறது.


ஆப்கானின் 'பகிட்டா' மாகாணத்தின் பனிபடர்ந்த மலைப் பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த மோதலின் போது பதுங்கு குழிகளில் மறைந்திருந்த 5ஆயிரத்துக்கும் மேற்பட்ட தலிபான் மற்றும் அல்கெய்டா போராளிகள் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் -

அவர்களின் மத்தியில் அரபு உட்பட வெளிநாட்டுப் போராளிகளும் காணப்பட்டதாகவும் -

ஆப்கான் படையினர் தெரிவித்தனர்.

அமெரிக்கா, ஆப்கான் கூட்டுப் படையினருக்கு இந்த மோதலில் கடும் சேதம் ஏற்பட்டதாக அமெரிக்க இராணுவக் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்தது. (ஒ-9)

## ஆப்கான் படைக்கு அமெரிக்கப் பயிற்சி



துப்பாக்கிக் கலாசாரத்தில் வளர்ந்த ஆப்கானியருக்கு துப்பாக்கி சுடுவதில் பயிற்சி அளிக்கும் அமெரிக்க வீரர்கள்.



கண்ணிவெடி அகற்றும் பயிற்சியை அவதானிக்கும் ஆப்கானிஸ்தானின் புதிய இராணுவத்தினர்.



கலகம் அடக்குவதற்கான செயல்முறையை விளக்கும் பிரிட்டிஷ் வீரர்.


# 18மாத சிசு உட்பட 19யூதர்கள் பலஸ்தீனத் தாக்குதலில் உயிரிழப்பு!

ஜெருசலேம்,மார்ச்4

மேற்கு ஜெருசலேமில் யூத வழிபாட்டுத் தலமருகே 'சபாத்' தினமான நேற்றுமுன்தினம் பலஸ்தீனத் தற்கொலைக் குண்டுதாரி மேற்கொண்ட தாக்குதலில் ஒன்றரை வயதுப் பெண் குழந்தை உட்பட ஒன்பது பேர் உயிரிழந்தனர்; 57 பேர் காயமடைந்தனர். அவர்களில் ஆறுபேர் ஆபத்தான நிலையில் இருப்பதாக இஸ்ரேலியப் பொலீஸார் தெரிவித்தனர்.

'சபாத்' எனப்படும் யூதர்களின் வார இறுதி வழிபாட்டு நாளன்று உள்ளூர் நேரப்படி இரவு ஏழு மணியளவில் மதத் தலத்தில் இருந்து வீடுகளுக்குச் சென்றுகொண்டிருந்த யூதர்களால் வீதி நிறைந்திருந்த சமயம் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

பலஸ்தீனத் தீவிரவாத இயக்கமான அல் அக்ஷா மார்ரிஸ் படையணி இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளது. 'பலட்டா' மற்றும் 'ஜெனின்' பலஸ்தீன அகதிமுகாம்களில் இஸ்ரேலியப் படையினர் நடத்திய தாக்குதலில் 19 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கவே




இந்தத் தற்கொலைத் தாக்குதலை நடத்தியதாக அந்த இயக்கம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலுக்கு பலஸ்தீன அதிகார சபை கண்டனம் தெரிவித்துள்ளபோதிலும், இதற்கான முழுப் பொறுப்பும் இஸ்ரேலிய அரசையே சாரும் என்று அது குறிப்பிட்டுள்ளது.

இத்தாக்குதல் முதலில் கார்க் குண்டுவெடிப்பால் நடத்தப்பட்டதாகக் கருதப்பட்டது. சம்பவ இடத்தில் நடத்தப்பட்ட சோதனைகளின் பின்னர் தற்கொலைக் குண்டுதாரியே தாக்குதலை நடத்தியுள்ளதாக இஸ்ரேலியப் பொலீஸார் தெரிவித்தனர்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத் தரப்புகளிடையே சமாதானப் பேச்சை ஆரம்பிக்கும் முயற்சியில் சவூதி அரேபியா ஈடுபட முன்வந்துள்ள சமயத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## குஜராத்தில் மதக்கலவரம் தணிந்தது!

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் நான்கு நாள்களாக இடம்பெற்ற மதக்கலவரம் நேற்று முதல் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுவிட்டதாகவும் -

இதுவரை கலவரத்தில் 437பேர் உயிரிழந்துள்ளதாகவும் -

குஜராத் மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் இராமர் கோயில் கட்டும் நோக்கத்துடன் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான கடும்போக்கு இந்துத்துவ அமைப்புகளின் தொண்டர்கள் தத்தமது சொந்த ஊர்களுக்கு திரும்பிச் செல்லத் தொடங்கியிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தத் தொண்டர்கள் பாதுகாப்பாக பயணங்களை மேற்கொள்ள மத்திய - மாநில அரசுகள் ஏற்பாடுகளைச் செய்துள்ளன. (ஒ)

# இராணுவ அரசின் நெருக்கடியால் பத்திரிகை ஆசிரியர் ராஜினாமா

இஸ்லாமாபாத்,மார்ச்4

பாகிஸ்தானிய நாளேடான 'திம் பீஸ்' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஷர்வின் நவாஸ் நேற்றுமுன்தினம் பதவி விலகியுள்ளார்.

அமெரிக்கச் செய்தியாளர் டானியல் பேர்ல் கொல்லப்பட்டத்தற்கு முக்கிய காரணகர்த்தா என்று கூறப்படும் இஸ்லாமியத் தீவிரவாதியைப் பற்றிய செய்திகளை வெளியிட்ட செய்தியாளர் உள்ளிட்ட மூன்று மூத்த பணியாளர்களை பத்திரிகையை விட்டு நீக்கும்படி தம்மை பாகிஸ்தானிய அரசு கட்டாயப்படுத்தியதாகவும் - அதனாலேயே ஆசிரியர் பதவியைவிட்டு தான் விலகுவதாகவும் நவாஸ் தெரிவித்துள்ளார்.

அப்பத்திரிகையின் தலைமைப் பொறுப்பு ஆசிரியருக்கு அனுப்பியுள்ள தனது பதவி விலகல் கடிதத்தில - பாகிஸ்தானிய அரச அதிகாரிகள் தம்மேல் திணிக்கும் கட்டாயத்தினால் தான் தாம் பதவி விலகுவதாக ஆசிரியர் நவாஸ் குறிப்பிட்டுள்ளதாக பாகிஸ்தானிய பத்திரிகையாளர்கள் பாதுகாப்புக் குழு தெரிவித்தது.

# தீவிரவாதி பயணிப்பதாகப் பீதி; இந்திய விமானம் சுற்றிவளைப்பு!

## நியூயோர்க்கில் பரபரப்பு

தீவிரவாதிகள் பயணிப்பதாக அச்சம் ஏற்பட்டதால் இந்திய விமானத்தை அமெரிக்க போர் விமானங்கள் சுற்றி வளைத்து தரையிறக்கிய சம்பவம் கடந்த வாரம் அமெரிக்காவின் நியூயோர்க் விமான நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தியாவின் மும்பை விமான நிலையத்தில் இருந்து லண்டன் ஊடாக அமெரிக்கா சென்ற 'எயர் இந்தியா' விமானம், லண்டன் 'ஹீத்ரு' விமான நிலையத்திலிருந்து கிளம்பிய சமயம் அமெரிக்க அரசால் தேடப்படும் இஸ்லாமியத் தீவிரவாதி ஒருவர் அந்த விமானத்தில் பயணிப்பதாக அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து கனடா மற்றும் அமெரிக்கப் போர் விமானங்கள் அந்த விமானத்தை வானில் சுற்றி வளைத்து நியூயோர்க் விமான நிலையத்தில் தரையிறக்கின.

அதிகாலை 3.30 மணிக்கு தரையிறக்கப்பட்ட இந்திய விமானம் ஒதுக்குப் புறமான இடத்தில் நிறுத்தப்பட்டு, அதிலிருந்த 378 பயணிகளும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். பயணிகளில் அரேபியப் பெயர் கொண்ட ஒருவரையும் அவருடன் வந்த பெண்ணையும் விமானத்திலிருந்து இறக்கி தனியே விசாரணை நடத்தப்பட்டது.

ஆயினும் இறுதியில் சந்தேகத்துக்குரியவர் எவருமில்லாததால் பயணிகள் தமது பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டனர். (ஒ)

# மடகஸ்காரில் 2 போட்டி அரசுகள்; அந்நாட்டு மக்கள் அதனால் திணறல்!

அன்ரனானாரிவோ,மார்ச்4

தமது நாட்டில் அறிவிக்கப்பட்டுள்ள இரண்டு போட்டி அரசுகளால் மடகஸ்கார் மக்கள் திணறிப் போயுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த டிசெம்பரில் இடம்பெற்ற அதிபர் தேர்தலில் பெரும் மோசடிகள் இடம்பெற்றதாகக் கூறி எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தின. அதன் பின்னர் அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவில், அப்போது அதிபராக இருந்த டிடையர் ரட்செரகா மீண்டும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதனால் நாட்டில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி, ஆதரவாளர்களிடையே வன்முறை மோதல்கள் வெடித்தன.

தேர்தல் முடிவின்படி ரட்செரகா அதிபராகப் பதவியில் நீடிக்கும் போது, எதிர்க்கட்சித் தலைவரும், அதிபர் தேர்தல் வேட்பாளருமான மார்க் ரவலொமனானா தன்னைத்தானே அதிபராக அறிவித்துள்ளார்.

அதிபர் தேர்தலில் தானே வெற்றி பெற்றதாகவும் -

ரட்செராக வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது மோசடி என்றும் -

ரவலொமனானா கூறியுள்ளார்.

17அமைச்சர்கள் கொண்ட அமைச்சரவை ஒன்றையும் அவர் அறிவித்தார். பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் இதில் நியமிக்கப்படவில்லை.

போட்டி அரசு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதிபர் ரட்செரகா நாட்டில் இராணுவச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளார். ஆனால் இந்த இராணுவச் சட்டத்தைத் தனது அரசு இரத்துச் செய்துவிட்டதாக போட்டி அதிபர் ரவலொமனானா செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

போட்டி அதிபர் ரவலொமனானா தலைநகர் அன்ரனானாரிவோவின் மேயராகப் பதவி வகிக்கிறார். இதனால் தலைநகரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அவரிடம் உள்ளது.

இதனால் தலைநகர் நிர்வாகத்தைப் பொறுத்தவரை அதிபரும், போட்டி அதிபரும் சமபலத்துடன் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, நாட்டில் பரவலாக ஆளும்கட்சி, எதிர்க்கட்சி ஆதரவாளர்களிடையே மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் இரு அதிபர்கள், அவர்களது தனித்தனி அரசுகள் என்று பெரும் அரசியல் குழப்பத்தில் மடகஸ்கார் சிக்கியுள்ளது. (ஒ)

## நிதியும் இல்லை; உபகரணங்களும் இல்லை

# குடாநாட்டில் வீதிகள், பாலங்கள் புனரமைக்க முடியாத நிலையில்

## கையை விரிக்கின்றனர் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்4

கண்டி வீதியில் உள்ள பாலங்கள் உட்பட யாழ்குடாநாட்டில் மொத்தம் 17 பாலங்கள் அவசரமாகப் புனரமைக்கப்பட வேண்டும். ஆனால் நிதி ஒதுக்கீடு மற்றும் புனரமைப்புக்கான பொருள்கள், உபகரணங்கள் கிடைக்காததால் அந்தப் பணிகள் அப்படியே தடைப்பட்டுப் போயுள்ளன.

இவ்வாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவிக்கின்றனர்.

கண்டி வீதியைத் திறப்பதற்கு அரசு முயற்சித்துவரும் இவ்வேளையில் அதனைத் திருத்துவதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடு இன்னும் செய்யப்படவில்லை. இந்தப் பணிகளுக்காக அரசிடம் 4 கோடி ரூபா கோரப்பட்டுள்ளது. எனினும் இதுபற்றி எந்த அறிவித்தலும் வந்து சேரவில்லை.

யாழ்.மாவட்டத்தில் பிரதான வீதிகளைப் பராமரிப்பதற்கு போதிய நிதி வசதிகள் இல்லை. இதனால் அதிகார சபை பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

இந்த வருடத்திற்குரிய நிதி அரசால் ஒதுக்கப்படவில்லை. அதே நேரம் வீதி திருத்த வேலைக்கு வேண்டிய உபகரணங்களும் அனுப்பி வைக்கப்படவில்லை. இதனால் வேலைகள் மந்த கதியிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த வருடத்தில் எஞ்சிய நிதி மற்றும் பொருள்களைக் கொண்டே தற்போது சிறு திருத்த வேலைகளைச செய்து வருகிறோம். எனினும் குறைந்தளவு நிதியுடன் வேலைகளைச் செய்வதற்கு ஒப்பந்தக்காரர்கள் முன்வரப் பின்னடிப்பதால் வீதிகள் திருத்தும் பணி தடைப்பட்டுள்ளது.

மழைக்காலம் முடிந்தும் கூட குண்டும் குழியுமாகக் காணப்படும் வீதிகளைத் திருத்தமுடியாதவொரு நிலை உள்ளது. பாலங்கள் திருத்துவதற்கு வேண்டிய கொங்கிறீற் மற்றும் கொங்கிறீற் குழாய்கள் முதலியன கப்பல் மூலம் கொண்டுவர முடியாத சூழ்நிலையில் நாவற்குழிப்பாலம், வண்ணாத்திப்பாலம், கைதடிப்பாலம் போன்றவற்றைத் திருத்துவதில் பெரும் சிரமம் உள்ளது.

### சம்பந்தப்பட்டவர்கள் அசிரத்தை

மக்கள் வீதிகளின் எல்லைக்குள் மதில்கள், வேலிகளை அமைக்க முற்படுகின்றனர். இவற்றைக் கண்காணிக்க வேண்டிய பிரதேச சபையினரோ மாநகர சபையினரோ அவற்றை அக்கறையுடன் கவனிக்கிறார்கள் இல்லை.

மக்கள் தமது தேவையை மட்டும் கருத்திற் கொண்டு செயற்படுகின்றனர். வீதிகளை வெட்டுதல், வீதிகளில் குப்பை கொட்டுதல், கடைகளை வீதி ஓரங்களில் அமைத்தல் முதலான பல செயற்பாடுகள் மூலம் வீதிகளின் பரப்புக்கள் சுருங்கி வருகின்றன.

ஆலயங்களை வீதி ஓரங்களில் அமைக்கின்றனர். சில பொதுக் கட்டடங்களைக் கட்ட முற்படுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் வீதி விபத்துக்களுக்கும் காரணமாக அமைகின்றன.

### ஆளணியும் இல்லை

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வேலைத் தளத்திற்குப் போதிய ஆளணி இல்லாத குறையும் நிலவுகிறது. அத்துடன் தரமான பொறியியலாளர்கள் பிற இடங்களில் இருந்து வந்து சேவையாற்ற விரும்புகிறார்கள் இல்லை. இதற்கு போக்குவரத்து மற்றும் பதவி உயர்வு வழங்காமை முதலான பல சிக்கல்களும் காரணமாக அமைகின்றன.

பாதை திருத்த வேலைகளைச் செய்வதற்கு வேண்டிய ஊரி, மணல், கல்லு முதலானவற்றினைப் பெறுவதற்கான விலைகள் நிர்ணயக் கூட்டம் கடந்த 19ஆம் திகதி கச்சேரியில் நடைபெற்ற போதும் அது பற்றிய உத்தியோக பூர்வமான அறிவித்தல் இன்னும் எமக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

மக்கள் வீதிகளைப் பராமரிப்பதில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - இவ்வாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் கோரியுள்ளனர்.

(க-ரி)

### சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு நிதியுதவி

கனடாவில் வாழும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள், அண்மையில் கனடா சென்றிருந்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜிடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்காக 25ஆயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்கினர். (க-31)

### திருடனுக்கு புத்திமதி

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் திருட்டுச் சம்பவத்தில் அகப்பட்டவர் ஒருவருக்கு அப்பகுதி சனசமூக நிலையத்தினர் எச்சரிக்கை செய்தும் புத்திமதியும் கூறி மன்னித்து அனுப்பினர்.

சம்பவம் பற்றி தெரிவிக்கப்படுவதாவது.

புத்தூர் பகுதியில் 'லீக்ஸ்' பயிரைத் திருடிவந்து புன்னாலைக்கட்டுவன் பகுதியில் தோட்டக் கிணறு ஒன்றில் கழுவிக் கொண்டிருந்த வேளை அப்பகுதி இளைஞர்களால் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார். பின்பு அப்பகுதி சனசமூக நிலையத்திடம் அவர் ஒப்படைக்கப்பட்டார்.

தான் திருட்டில் ஈடுபட்டதை குறிப்பிட்ட நபர் ஒப்புக்கொண்டதால் எச்சரிக்கை செய்து கூலி வேலை செய்தாவது உழைத்துச் சாப்பிட வேண்டும் என்று ஆலோசனையும் வழங்கி அவர் அனுப்பப்பட்டார். (க-133-ரி)

### யாழ்.பல்கலைக்கு தெரிவாகியுள்ள மேலும் 70 பேர்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக 2001/2002 கல்வியாண்டுக்கு பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் ஆகிய கற்கை நெறிகளுக்கு வெற்றிடம் நிரப்புப் பட்டியல் மூலம் 70 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த கற்கைநெறிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்களை அந்தந்தப் பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் எனவும் -

இவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் -

யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (க-4)

## இவரைக் காணவில்லை



### திரு.விநாசித்தம்பி கணேசபிள்ளை

*(அம்மன் வீதி, திருநெல்வேலி)*

என்பவரை 28.02.2002 வியாழக்கிழமை முதல காணவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழுள்ள முகவரிக்கு தகவல்தரவும்.

சி.கனகசபாபதி,
அம்மன் வீதி,திருநெல்வேலி வடக்கு.

(1306)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் உப அதிபர்

திரு.மா.அலோசியஸ் அவர்களின் அன்புச் சகோதரர்

### மாணிக்கம் ஆரோக்கியநாதர்

அவர்கள் 01.03.2002இல் காலமானதையிட்டு மிகவும் மனம் வருந்துகின்றோம். அன்னாரின் மறைவால் துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அமரருககு கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

*தொழில்நுட்பக் கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.* (1308) - மாணவர்கள்.

## நீங்கா நினைவலைகளில் ஆண்டு 10

பிறப்பு 15 - 06 - 1918



இறப்பு 22 - 02 - 1992

### திருமதி நாகராஜா பாக்கியம்

**திதி: 04-03-2002**

அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே
நேரில் நின்று பேசும் தெய்வம் பெற்றதாயன்றி வேறொன்று ஏது?
விலை மீது விலை வைத்துக் கேட்டாலும் கொடுத்தாலும்
கடை தன்னில் தாயன்பு கிடைக்காதம்மா
அடுத்திங்கு பிறப்பொன்று அமைந்தாலும்
நாங்களுங்கள் பிள்ளைகளாகப் பிறக்கின்ற வரம் வேண்டுமே!

*எங்கள் பாச தீபத்தின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*ஆலங்குளாய்,*
*சண்டிலிப்பாய்.* (1309)

# காணாமற்போனோர் விசாரணைக்கு புதிய சி.ஐ.டி. குழுவினர் வருகை

யாழ்ப்பாணம்,மார்ச்4

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவின் புதிய குழுவினர் இவ்வாரம் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இன்ஸ்பெக்டர் குழுகம்மண தலைமையிலான 4பேர் கொண்ட இந்தக் குழுவினர் கடந்த 1988, 1989 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை யாழ்.பொலிஸ் நிலையத்தில் வைத்து மேற்கொள்ளவுள்ளனர்.

இவர்கள் முதற்கட்டமாக 19பேரின விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த 19பேரின் இறுதிக்கட்ட விசாரணைகள் எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் -

இந்த விசாரணைகளுக்கு அழைகக்கப்பட்டவர்கள் சிரமத்தைப் பாராது சமுகமளித்து உதவுமாறும் -

இன்ஸ்பெக்டர் குழுகம்மண கேட்டுக்கொண்டார். (க-4)

# கரம் பிடித்த 'மன்மத மணாளன்' ஒரு வருடத்தில் பெண்ணான விந்தை!

இளம் யுவதியை ஆண் போன்று நடித்து திருமணம் செய்துகொண்ட பெண்மணி பற்றிய தகவல்கள் கொழும்பை அண்டிய களனிப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த இரண்டாயிரம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற திருமணப் பதிவை இரத்துச் செய்யக்கோரி ஏமாற்றப்பட்ட யுவதி நீதிமன்றத்தை அணுகியதை அடுத்தே இந்த விடயம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

திருமணம் செய்துகொண்ட இருவரும் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றுகின்றனர்.

இவர்கள் காதலித்து பெறறோரது ஆசியுடன் திருமணம் செய்து கொண்டனர். தமக்கென ஒரு வீடு கட்டும்வரையும் தனித்தனியே வாழ்ந்த இவர்கள் கடந்த டிசெம்பரில் புது வீடு கட்டி அதில் குடியமர்ந்தனர்.

அதன் பின்னரே தனது 'கணவன் ஒரு பெண் என்றும் போலி அடையாள அட்டையைக் காட்டியே ஆணாக அவர் நடித்து வந்ததும் - யுவதிக்குத் தெரிய வந்தது.

இதனை அடுத்து பொலீஸ் மூலம் தமது விவாகத்தை ரத்துச் செய்யும்படி அந்த யுவதி நீதிமன்றத்தை அணுகியுள்ளார்.

கம்பீரமான ஆண் தோற்றம் கொண்டிருந்ததால் தனது 'மன்மதக கணவன்' மீது சந்தேகமே வரவில்லை என்று அந்த யுவதி தெரிவித்தார். (க-ஓ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அருமைத்துரை அன்னலட்சுமி (இராசாத்தி)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்போது உடுவிலில் வசித்தவருமாகிய திருமதி அருமைத்துரை அன்னலட்சுமி 27.02.2002 புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு காலமானார்.

அன்னார் மயிலிட்டி தெற்கு (கட்டுவன்) சுந்தவனம் அருமைத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் கண்மணி, காலஞ்சென்றவர்களான சின்னக்கிளி - துரைசிங்கம் மற்றும் சீவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் புவனபூபதி, இராசபூபதி, பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் புஸ்பராணி, இந்திராணி (ஜேர்மனி), பவளராணி, ரஜனி (ஜேர்மனி), பாலகிருஸ்ணன் ஆகியோரின் அன்புத் தாயாரும் வல்லிபுரம், மகாராணி, சுப்பிரமணியம், காலஞ்சென்ற ஜெயரட்ணம் மற்றும் யசோதரன், ஜெயராஜா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் வசிகரன் (ஜேர்மனி), சுதாகரன், பகீகரன், சங்கரன், கலைவாணி, தர்சிகா, மயூரதி (பாலசிங்கம்), மயூரன், சுமதி, சுகந்தினி, திருக்குமார், சுலக்சனா, சுபதாஸ், சுமித்திரா, சுதாகரன், யாதவன், ஜெனார்த்தன், ஜெனனி, யாழினி, தீபன், சிந்துயா, தர்சன், ஜெனாத், ஜெயந், ஜெஜனா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மருதனார்மடம் பூவோடை மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*Kopernikus Str. 229,*
*45/43, Essen, Germany.*

தகவல்:
திருமதி ரஜனி ஜெயராஜா (மகள்) (1307)

## இராசேந்திரம் இந்திரகுமாரன்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் இந்திரகுமாரன் அவர்கள் நேற்று (03.03.2002) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசேந்திரம் - செல்வராணி தம்பதியினரின் அன்பு மகனும் சந்திரஜெயந்தி, சந்திரகுமார், இந்திரஜெயந்தி, ஜெயகுமார், சாந்தகுமார், ராஜ்குமார், சூரியஜெயந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நவரத்தினம் (நவம்), பத்மநாதன், கிருஷா ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2002) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காரைக்காட்டு ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.* (1305)

தகவல்:
இராசேந்திரம் (பத்தர்)
(தந்தை)

## கதிர்காமு செகராசா

(ஓய்வுபெற்ற பஸ் நடத்துநர் - C.T.B.)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் தற்போது பழம் வீதி, ஆறுகால் மடத்தடியில் வசித்தவருமாகிய கதிர்காமு செகராசா அவர்கள் நேற்று (03.03.2002) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் தவமணியின் அன்புமிகு கணவரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, இலட்சுமி ஆகியோரின் அருமை மருமகனும் காலஞ்சென்ற மேனகா மற்றும் பகீரதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சர்மிளா, ரகுபரன் (யா/மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சின்னராசாவின் அன்புச் சகோதரனும் ஜெயராசா (வன்னி), குணசேகரம் (அச்சுவேலி), மகாலிங்கசிவம் (பிரான்ஸ்), பரஞ்சோதி (கரவெட்டி), அமுதலிங்கம் (பிரான்ஸ்), சற்குணமூர்த்தி (கனடா), விநாயகமூர்த்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2002) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழம் வீதி, ஆறுகால்மடம்.* (1310)

தகவல்:
செ.பகீரதன் (மகன்)

உதயன்

## எல்லைகளைப் பிரிக்கும் உடன்படிக்கை அல்ல!

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உருவாகியுள்ள யுத்தநிறுத்த உடன்பாட்டை முறியடிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரது ஆலோசகரான கதிர்காமரும் ஒன்றிணைந்து சதி செய்வதாக விடுதலைப் புலிகள் இயக்கம் குற்றம் சுமத்தியிருக்கின்றது.

இந்தப் போர்நிறுத்த உடன்படிக்கையை ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய நாடுகளின் அமைப்பு, இந்தியா, அமெரிக்கா உட்பட அனைத்துலக சமூகமும் வரவேற்றிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனானும், அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவலும்கூட நேரடியாக இந்த உடன்படிக்கையை வரவேற்றிருக்கின்றார்கள்.

சமாதான உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகள் நாட்டின் இறைமைக்கும், பாதுகாப்புக்கும் ஆபத்து விளைவிப்பவை என்று பிரசாரப்படுத்துவதன் மூலம் இந்த உடன்பாட்டுக்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டி விடுவதற்கு ஜனாதிபதி குமாரதுங்கவும் அவரது அணியினரும் திட்டமிடுவதாக - சதி செய்வதாக - குற்றச்சாட்டு.

தமிழர் தாயகத்தில் புலிகள் வசம் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் இருக்கின்றன என்பதை இந்த அமைதி ஒப்பந்தம் ஏற்றுக்கொள்கின்றது. இந்த யதார்த்த மெய்யுண்மைக்கு, இந்த ஒப்பந்தம் மூலம் சர்வதேச அங்கீகாரம் கிடைத்திருப்பதை ஜனாதிபதி குமாரதுங்கவினால் பொறுக்கமுடியாமல் இருக்கின்றது.

அதனால்தான் உடன்படிக்கைக்கு எதிராக கடும் எதிர்ப்பை அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

எரிச்சல், தேவையற்ற அச்சங்கள் போன்ற காழ்ப்புணர்வில் இருந்தே ஜனாதிபதி குமாரதுங்கவின் இந்தக் கண்டனங்கள் எழுந்திருக்கின்றன என்று புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது.

அரசு - புலிகள் உடன்பாட்டில் உள்ள விதிகள் நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்து விளைவிப்பன என்று ஜனாதிபதி குமாரதுங்க எச்சரிக்கை செய்ய முற்படுகின்றார்.

அவரது எச்சரிக்கையில் இரண்டு அடிப்படை அம்சங்கள் உள்ளன.

ஒன்று - நாட்டின் எல்லைகளைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றும் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றும் இந்த உடன்படிக்கை பிரிக்கின்றது.

இரண்டு - நாட்டின் இறைமைக்கு இந்த உடன்பாட்டினால் ஆபத்து ஏற்படலாம்.

இந்த இரண்டு விடயங்களிலுமே ஜனாதிபதியின் கருத்து முற்றிலும் தவறானவை என்று அன்ரன் பாலசிங்கம் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

ஈழத்தமிழர் தாயகத்தில் புலிகள் பிரதேசமும் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமும், முன்னணிக் காவலரண்கள், காவல் வேலிகள், முள்ளுக்கம்பி அரண்கள் என்று திட்டவட்டமான எல்லை பிரித்து அமைந்திருப்பது யாவருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

இதுவரை காலமும் ஒருபக்க முள்ளுக்கம்பி வேலியைத் தாண்டி மறுபக்க முள்ளுக்கம்பி வேலிக்குச் செல்வதானால்கூட ஒருநாட்டு எல்லையிலிருந்து மறுநாட்டு எல்லைக்குச் செல்வதுபோன்றுதான் இருந்து வந்தது என்பதும் உலகுக்குத் தெரிந்ததுதான்.

இந்த எல்லைகளை அகற்றி, இருபக்கத்தையும் இணைப்பதற்கே இந்த உடன்படிக்கை அத்திவாரம் இடுகின்றது.

எனவே, அதனை, எல்லைகளைப் பிரிக்கும் உடன்படிக்கை என்று ஜனாதிபதி விமர்சிப்பது விதண்டாவாதமேயன்றி வேறில்லை.

அதேபோன்று இறைமை என்பது மக்களின் மகத்தான ஆட்சி அதிகாரமே அன்றி, ஓரின மக்கள் மீது மற்றைய இன மக்கள் ஆட்சி அதிகாரத்தைச் செலுத்துவதற்கான கட்டளை அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தன்னுடைய அரசியல் அபிலாஷைகளை எட்டுவதற்காக இந்த இரண்டு அடிப்படைகளையும் புரியாதவர்போல முடிமறைத்து தென்னிலங்கை மக்களைத் தவறான வழியில் இட்டுச்செல்வதற்கு ஜனாதிபதி குமாரதுங்கவின் அணி முயல்வது வீணான விபரீதங்களை ஏற்படுத்தும்; இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்குக் கிடைத்திருக்கும் நல்லதொரு சந்தர்ப்பத்தையும் இழக்கச் செய்துவிடும்.

இதை அவர் உணர்ந்து கொண்டால் அவருக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது; மக்களுக்கும் நல்லது.

# சோதனைச்சாவடிகளை நகர்த்தி உதவுமாறு பொன்னாலை மக்கள் மகஜர் கையளிப்பு

சுழிபுரம்,மார்ச்4

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வழிபாட்டுக்குச் சென்றுவரும் அடியார்களுக்கு தடையாகவுள்ள சோதனைச் சாவடிகளை நகர்த்தி உதவுமாறு அமைச்சர் தி. மகேஸ்வரனிடம் இப்பகுதி மக்கள் மகஜர் கையளித்துள்ளனர்.

மூளாய் வைத்தியசாலை அருகிலும், பொன்னாலை பிள்ளையார் ஆலயத்திற்கு அருகிலும் காணப்படும் சோதனைச்சாவடிகளையே கடற்கரைப் பகுதிக்கு நகர்த்தி உதவுமாறு மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் நெருக்கமாக இருக்கும் சோதனைச்சாவடிகளைக் குறைப்பதன் மூலம் சமாதான நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்கு முன்மாதிரியாக அமைய நடவடிக்கை எடுக்குமாறும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-10-5-28)

### வலி.கிழக்கு பிரதேச செயலக

# கிராம அலுவலர் பிரிவுகளில் போஷாக்கு அபிவிருத்தித் திட்டம்

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தின் 4 கிராம அலுவலர் பிரிவுகளில் போஷாக்கு அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருபாலைதெற்கு, இருபாலை கிழக்கு, கோப்பாய் வடக்கு, ஆவரங்கால் கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலேயே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

100நாள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தில் - கிராமந்தோறும் உள்ள 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணித்தாய்மார்கள் ஆகியோரின் போஷாக்கு நிலைகளைக் கண்டறிந்து அவர்களின் போஷாக்குநிலை மேம்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை ஏற்கனவே வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகத்தின் 8 கிராம அலுவலர் பிரிவுகளின் போஷாக்கு மேம்படுத்தும் முன்னேற்பாடாக போஷாக்கு நிலை அறியப்பட்டிருப்பதாகவும் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.கதிரமலைநாதன் தெரிவித்தார். (க-180)

# அனலைதீவு இறங்குதுறையை புனரமைக்குமாறு கோரிக்கை

ஊர்காவற்றுறை,மார்ச்4

நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாதுள்ள அனலைதீவு இறங்குதுறையைப் புனரமைப்புச் செய்து தருமாறு அனலைதீவு மக்கள், பொது அமைப்புக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுவரை காலமும் மேற்படி இறங்குதுறை பனை மரங்கள் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. அண்மையில் பெய்த கடும்மழை காரணமாக பனை மரத்தினால் அமைக்கப்பட்ட பாலத்துக்கும், இறங்குதுறை வீதிக்கும் இடையே போடப்பட்டிருந்த கற்கள் அரித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதனால் மேற்படி இறங்குதுறையில் படகுகளை அணைக்கவோ, பொருள்களை ஏற்றியிறக்கவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் -

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-7-16)

# ஊர்காவற்றுறையில் திருட்டு!

ஊர்காவற்றுறை,மார்ச்4

ஊர்காவற்றுறை நகரில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றினுள் நள்ளிரவுவேளை, கூரை பிரித்து இறங்கிய திருடர் கோஷ்டி ஒன்று அங்கிருந்த சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

பால் மா வகைகள், சவர்க்கார வகைகள், ஷம்பூ பைக்கற்றுக்கள், பிஸ்கற் வகைகள் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பனவே திருடப்பட்டுள்ளன.

சம்பவம் நடைபெற்ற அடுத்த நாள் காலையில் வர்த்தக நிலையத்தைத் திறக்க வந்த கடை உரிமையாளர் நிலையத்தின் பெயர்ப் பலகையில் 'ஷம்பூ' றோல் ஒன்று கிடப்பதை அவதானித்து திருட்டுக் குறித்து அறிந்துகொண்டார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து ஊர்காவற்றுறைப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையத்துக்குச் சமீபமாக பொலீஸ், கடற்படையினர் மற்றும் ஈ.பி.டி.பியினரின் காவலரண்கள் அமைந்துள்ளன. (க-7-16)

## வீதித் தடைகள் அகற்றப்பட்டன

கோப்பாய்,மார்ச்.4

கோப்பாய் சந்தி, புன்னாலைக்கட்டுவன் சந்தி ஆகியவற்றில் அமைந்திருந்த வீதித் தடைகள் அகற்றப்பட்டுள்ளன. இதேவேளை இருபாலைச் சந்தியில் அமைந்துள்ள வீதித் தடைகள் இதுவரை அகற்றப்படவில்லை.

(க-72)

## சுயதொழில் முயற்சிக்கு கடனுதவி

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த உதவிப் பணம் பெறும் விதவைகளின் சுய தொழில் முயற்சி ஊக்குவிக்கப்படவுள்ளது.

இவர்களுக்கு சமூக சேவை திணைக்களம் சுயதொழில் முயற்சி திட்டங்களுக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவுள்ளது. முதற்கட்டமாக 23 பேரும் இரண்டாம் கட்டமாக 14 பேரும் இந்த உதவியினைப் பெறுவார்கள். மேலும் உடல் ஊனமுற்ற மூவருக்கும் இந்த உதவி வழங்கப்படவுள்ளது.

(க-178-ரி)

## நாளை

மாசி 21

செவ்வாய்க்கிழமை

(05-03-2002)

திதி : சப்தமி

பின்னிரவு 1.40 வரை.

நட்சத்திரம் : அனுஷம்

பின்னிரவு 4.11 வரை.

சுபநேரம் : 10.56 - 12.26

ராகுகாலம் : 3.26 - 4.56

(பழைய நேரப்படி)

## வீதி திறக்காததால் உசன் மாணவர் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்,மார்ச்4

உசன் இராமநாதன் கல்லூரி மீண்டும் அதன் சொந்தக் கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. இதனை அடுத்து கணிசமான மாணவர்கள் இப்பாடசாலையில் மீண்டும் இணைந்து வருகின்றனர்.

பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் மிருசுவில் பிரதான வீதிப் பகுதியிலிருந்து உசனுக்குச் செல்லும் வீதிகள் மக்கள் பாவனைக்கு, இன்னமும் திறந்துவிடப்படவில்லை.

இதனால் மாணவர்களும், ஆசிரியர்களும் மிருசுவிலிருந்து சீரற்ற மணற்பாங்கான சுற்றுப் பாதை வழியாக மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே பாடசாலைக்குச் சென்று வரவேண்டியுள்ளது.

மிருசுவில் - உசன் கட்டு வரம்பு வீதி, மிருசுவில் புகையிரத நிலைய வீதி, மிருசுவில் பொன்னுக்கோன் வீதி ஆகியவற்றில் ஏதாவது ஒரு வீதியை மக்கள் பாவனைக்குத் திறந்து உசனுக்குக்கான போக்குவரத்துச் சிரமத்தை நீக்க சம்பந்தப்பட்டோர் ஆவன செய்யவேண்டுமென பெற்றோரும், ஆசிரியர்களும் கேட்டுள்ளனர்.

(க-15)

## உதயவாக்கு

"எங்கே போகிறோம் என்று தெரிந்து செல்பவர்களுக்கு எல்லோரும் வழிவிடுவார்கள்."

# நாட்டு நடப்பு

## கனடாவுக்கு ஒரு கடிதம்

11ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
04.03.2002

அன்புள்ள பெரியண்ணைக்கு!

நீங்கள் போன பின் நான் தனித்துப்போனேன்
நிர்மலா தம் நிமலனும் கனடா போட்டார்
அப்பாவும் ஷெல்வீச்சில் அகாலமரணமானார்
அம்மாவும் மனநோயால் மாண்டுபோனாள்
நானூறு குடியிருந்த திருபூங்குடியில்
நாற்பதுதான் குடியிப்போ மிச்சமாச்சு
தென்னை யெலாம் தறிபட்டு பங்கராச்சு
செய்த பயிர் இடமெலாம் படையிடமே போச்சு
வெள்ளெருக்கு பெரிதாகப் படர்ந்து போச்சு
விஷப் பாம்பும் புற்றெல்லாம் பரவலாச்சு
பொன் சேர்த்து புகழ்பூத்த இந்த நாட்டில்
புற்றுக்குள் பாம்புதான் மிச்சமாச்சு
குடிபெயர்ந்து வெளிநாடு போனோர் எல்லாம்
கோடி கொடுப்பினும் இங்கு மீளமாட்டார்
தனியாக நானிங்கு என்ன செய்வேன்
சகசமாய் சிங்களம் இப்போ பேசுகிறேன்
கனடாவில் எமக்கு ஒரு கிராமம் காண்போம்
மண்போட்டு புகையிலை நட்டுப் பார்ப்போம்
மறுத்தால் ஆட்சி உறுதி எழுதி வைப்போம்.

அன்புத்தம்பி
க.தருமசேனன்

*- விகடகவி.*

# பாடசாலை முகாமைத்துவ உதவியாளர் பல கோரிக்கைகளை முன்வைத்து மகஜர்

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் முகாமைத்துவ உதவியாளர்களாகக் கடமையாற்றும் பட்டதாரிகள் தமக்கான சம்பள நிலுவை, வருடாந்த சம்பள ஏற்றம் ஆகியவற்றைப் பெற்றுத்தருமாறு கோரி இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் மகஜர் ஒன்றைச் சமர்பித்துள்ளனர்.

மேற்படி பட்டதாரிகள் சார்பில் பாடசாலை முகாமைத்துவ உதவியாளர் சங்கம் இந்த மகஜரை அனுப்பி வைத்துள்ளது.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

★ நியமனம் கிடைத்து மூன்று வருடங்கள் கடந்தும் தடைதாண்டல் பரீட்சை நடத்தப்படவில்லை. இதனால் சம்பள உயர்வுகள் குறித்து அறியமுடியவில்லை.

★ பயிற்சி வகுப்புக்கள் எவையும் நடத்தப்படாமையினால் உத்தியோக ரீதியாகப் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

★ மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் காணப்படும் பதவி தொடர்பான டிப்ளோமா முகாமைத்துவ கற்கை நெறியை யாழ்.பல்கலைக்கழகத்திலும் ஆரம்பிக்க வழிவகை செய்தல்.

★ இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை நிர்வாக சேவை, இலங்கை அதிபர் சேவை ஆகிய பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கான அனுமதியைப் பெற்றுத்தருதல்.

★ ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் பரீட்சை மேற்பார்வையாளர்களாக கடமையாற்ற அனுமதித்தல்.

★ தேர்தல் கடமைகளில் சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்களாக எம்மை நியமனம் செய்ய நடவடிக்கை எடுத்தல்வேண்டும்.

★ பாடசாலை விடுமுறை காலங்களிலும் பாடசாலைக்குச் செல்லவேண்டும் என்ற நடைமுறை தொடர்ந்து அமுல்படுத்தப்படுவதால் பெண் முகாமைத்துவ உதவியாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மற்றும் சில கோரிக்கைகளும் இந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(க-7)

# குற்றம் குறைகளை நிவிர்த்திக்க வேண்டுவோம்

## தவக்காலச்சிந்தனை

இயேசுக்கிறீஸ்து தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வருகின்றார். தொழுகைக் கூடத்தில் சுருளோட்டை வாசித்துக் போதிக்கின்றார். இயேசுவினுடைய பேச்சாற்றலைக் கண்ட அவ்வூர் மக்கள் வியந்து, பாராட்டுகிறார்கள். ஆனால், இயேசு இஸ்ராயேலருக்கு என்றுமே கசக்கும் சில வரலாற்று உண்மைகளை எடுத்துரைக்கும் பொழுது நாசரேத்தூர் மக்கள் அவருக்கு எதிராகக் கிளம்பி அவரைக் கொலை செய்யும் அளவுக்குத் துணிகின்றார்கள்.

ஆம், உண்மையும் நீதியும் பாவற்காய் போல என்றைக்கும் கசக்கும். ஆனால், அதனை ஆமோதித்தே ஆகவேண்டும். ஏனெனில், அவை என்றைக்கும் மாற்றமடைவதில்லை. ஆனால் ஏனோ எமது மனிதப் பலவீனம் அந்த நன்னெறிகளை மனதார ஏற்றுக்கொள்வதில்லை என்பதும் அவற்றை அதிகாரத்தையும், ஆயுதத்தையும் கொண்டு அடக்க முயலுவதையும் நாம் நாளாந்தம் காண்கின்றோம். கனிந்தொழுகப் பேசும் கயவனுடைய பசப்பு வார்த்தை ஜாலத்தை தவிட உண்மையுடனும் நேர்மையுடனும் கடிந்துகொள்ளும் நண்பனுடைய கடுஞ்சொற்கள் பல மடங்கு மேலானவை.

## இருபதாம் நாள்

எவராவது எமக்கு அறிவுரை கூறும பொழுது அல்லது எம்மைத் திருத்த முயலும் பொழுது எம்மை நாம் நியாயப்படுத்த முனையக்கூடாது. இன்னும், அறிவுறுத்துபவரை சிறியவனா? பெரியவனா? வறியவனா? செல்வந்தனா? சாதியில் கூடியவனா? குறைந்தவனா? என்று வர்க்கப்படுத்திப் பார்க்கவும் கூடாது.

மாறாக அவர் சொல்ல முற்படும் விடயம் உண்மையிலேயே எனக்குத் தேவையானதா? எவ்வாறு அந்த அறிவுறுத்தலுக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ள வேண்டும் என்று என்னையே ஆய்ந்தறிய வேண்டும். இறைச்சித்தத்திற்கு இசைந்து ஆன்மீக வளர்ச்சிக்குப் பயனுள்ளதாக்க வேண்டும்.

எனவே இந்த அருளின் காலமாகிய தவக்காலத்திலே, எங்களுடைய குற்றம் குறைகளை இனம் கண்டு அவற்றை நிவிர்த்தி செய்ய இறையருள் வேண்டுவோம். அதே வரிசையில் இன்று நாம் எமது தாழ்ச்சியையும் பொறுமையையும் சோதித்துப் பார்த்து வலுப்படுத்தி இறையாசீர் இறைஞ்சுவோம். இதற்கு உதவியாக இந்த வாக்கியத்தை இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

"யார் சொல்கிறார்கள் என்பதல்ல; என்ன சொல்கிறார்கள் என்பதே முக்கியம்"

*யாழ்ப்பாணம்* யோ.பீஷ்மன் - அ.ம.தி.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

வடலித்தோட்டம், மானிப்பாய் என்னும் முகவரியுடைய விஜயகுமாரி அம்பலவாணர் என்பவரது தேசிய அ.அ. (இல.718141826V), விசேட அ.அ. (இல.0905014566), உத்தியோக அ.அ. என்பன மானிப்பாய் சந்தைக்கும் மானிப்பாய் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1280)

சென்.அன்ரனிஸ் லேன், பண்டத்தரிப்பைச் சேர்ந்த சென்.ஜோன் றெனாட் ஜோன்சன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 642200755V), விசேட அ.அட்டை (இல. 0905006672) என்பன யாழ்.பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் A.E.பீரிஸ், யாழ்.போதனா வைத்தியசாலை என்ற விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (1284)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் தொழில் செய்யும் செவ்வாய்க் குற்றமுள்ள, 34 வயது மணமகனுக்கு ஓரளவுக்கு ஆங்கிலம் தெரிந்த மணமகள் தேவை. முகாமைத்துவ நெறியில் டிப்ளோமா பெற்ற CIMA LEVEL 1&2 சித்தியடைந்த லண்டன் பிரஜாவுரிமையுள்ள மணமகன். திருமணம் யாழ்ப்பாணத்தில் செய்ய விருப்பம். தொடர்பு: விளம்பர இல. 1474, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (C/20938)

### ஒரு காதலின் கதை

உதயனில் ஒரு காதலின் கதை நாவலின் விமர்சனத்தை வாசித்துப் பார்த்தீர்களா? இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் நாவல். 340 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இரண்டாவது நாவல். (1236)

### தேவை

சைவ உணவகத்திற்கு காசாளர், தோசை மாஸ்டர், தேநீர் மாஸ்டர், விநியோகஸ்தர் (சப்ளையர்), கைவேலைக்கு ஆள் தேவை. நேரில வரவும். இல.131, 2ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு. தொலைபேசி இல. 326289. (C/20942)

### விற்பனைக்கு

நீள கோண்கள் 24", 22", 18", அம்பிளிபயர் 150W, யூனிற்றுகள், மைக்குகள், ஆலய பாவனைக்கு உகந்த இந்தியத் தயாரிப்புப் பட்டுக்குடைகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம.மயூரன், மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில். (1297)

### வீடு விற்பனைக்கு

ஏழாலை கிழக்கில் 53/4 நிலப்பரப்புடன் கூடிய உறுதியான கல்வீடு விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு: S.ஜெயராஜா, 202, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (1258)

## காட்டுப் பன்றிகள் அட்டகாசம்

யாழ்ப்பாணம்,மார்ச்4

மட்டுவில், நுணாவில், கைதடி ஆகிய பகுதிகளில் காட்டுப் பன்றிகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

இப்பகுதி குடிமனைப் பகுதிகளில் பன்றிகள் புகுந்து நிலத்தை அகழ்ந்து சேதமாக்குவதுடன், தென்னங் கன்றுகள் மற்றும் சிறுதாவரங்களை அழித்தும் வருகின்றன. இப்பகுதிகளில் குறைந்தளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் பன்றிகள் அதனை அதிக அளவில் சேதப்படுத்தியுள்ளது.

நெல் அறுவடை செய்யப்பட்டுள்ள நிலங்களையும் அவை அகழ்ந்து நாசம் செய்கின்றன. (க-27-ரி)

## கொடிகாமம் கூ.சங்கம் சொந்த இடத்தில்!

இடம்பெயர்வின் பின்னர் நெல்லியடியில் இயங்கிவந்த கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகமும், கிராமிய வங்கியும் இன்று திங்கட்கிழமை தொடக்கம் சொந்த இடத்தில் மீண்டும் இயங்கவுள்ளதாக சங்கத் தலைவர் வ.ந.வல்லிபுரம் தெரிவித்தார்.

கடந்தவாரம் நடைபெற்ற இயக்குநர் சபைக் கூட்டத்தில் தலைமை அலுவலகத்தைக் கொடிகாமத்தில் ஆரம்பிப்பது எனவும் -

சங்கத்தின் களஞ்சியத்தை தொடர்ந்து வதிரியில் வைத்திருப்பது எனவும் - முடிவுசெய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஓ-117)

## தேவாவின் 51ஆவது அகவை



மார்ச் 10இல் 51ஆவது அகவையைக் கொண்டாடும்

உயர்திரு. **க.தேவராஜா** (வணிகத்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)

தந்தை தாய் தவத்தின் பேறாய் தருமத்தின் விளைவாய் – நல்லோர்
சிந்தையுள் பெருமை கூறும் சிறப்பொடு வளர்ந்தெம் ஊரின்
பண்பொடு ஒன்றாய் – நன்றாய் பழகும் உம் சுற்றத்தோடும்
இன்றுயர் 'மணிநாள்' கண்டீர் இறைவனின் அருளால் வாழ்க!

வி.தயாபாலன்
கல்லை ஓல்சேர் கம்பியூட்டர் நெற்.
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## 31ஆவது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 19 – 01 – 1909



மறைவு 03 – 02 – 2002

### திருமதி சிதம்பரம் சிவசோதிஅம்மா

எங்கள் அன்புள்ள அம்மாவே!
உனக்கு நிகர் நீயேதான் அம்மாவே!
அழகுத் திருமுகமும் அன்பான வார்த்தையும்
எண்ணில் அடங்கவில்லை அம்மாவே!
எம் விழிநீர் தாங்காத வேதனையில்
தாழாமல் தவிக்கின்றோம் நாமிங்கு!
ஓம் சாந்தி! சாந்தி!!. சாந்தி!!!

எமது குடும்ப ஒளிவிளக்கான மாணிக்கத்தின் அஸ்தமனச் செய்தி கேட்டு எம்மை நாடிவந்து எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் கடிதம், தொலைபேசி மூலம் அனுதாபந்தெரிவித்தோருக்கும் எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்கொண்ட அனைவருக்கும் எமது உள்ளம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*நாளை (05. 03. 2002) செவ்வாய்க்கிழமை* எமது இல்லத்தில் நிகழும் அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வுகளிலும், மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

*"மணி மஹால்"* திரு.சி.சரவணமுத்து குடும்பம் *(மகன்-பிரான்ஸ்)*.
*கோட்டைக்காடு,* திரு.சி.சின்னத்தம்பி *(மகன்)*.
*மல்லாகம்.* (1298) திரு.சி.கிருஷ்ணசாமி *(ராதா)* *(மகன்-கனடா)*.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 25 - 04 - 1956



உதிர்வு 02 - 02 - 2002

### அமரர் மாணிக்கம் சின்னராசா (ஐயா)

*(புதுக்குடியிருப்பு, 8ஆம் வட்டாரம்)*

*மெய்யாய் ஐயா! எமை விட்டுப் போனீரா?*
*காலம் கடந்த உம் பிரிவுத் துயர்ச் செய்தி*
*பொய்யாகக் கூடாதா ஐயா!*

*மீசாலை மண்ணில் சிரித்த முகத்துடன்*
*நல்வாழ்வு வாழ்ந்துவிட்டு*
*புதுக்குடியிருப்பு மண்ணில் வாழ்வைத் தொடர்ந்த நீ*
*நம்மையெல்லாம் துயரக் கடலில்*
*தத்தளிக்க விட்டுச் சென்றாயோ ஐயா?*

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
தந்தை, சகோதரர்கள், மைத்துனர்மார்.

நிரந்தர முகவரி:
*கேணியடி வீதி,*
*மீசாலை மேற்கு, மீசாலை.* (C/20943)

தற்காலிக முகவரி:
*வதிரி, கரவெட்டி.*

# கல்விச்சாலைக் காட்சிகள்



வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

போட்டிகளில் முதல்நிகழ்வாக இடம்பெற்ற மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை பிரதமவிருந்தினரான வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா ஆகியோர் ஏற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். அருகில் கல்லூரி அதிபர் சி.இராமலிங்கம் காணப்படுகின்றார். (க-7)



வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கிளையினர் அண்மையில் கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கினர்.

இது தொடர்பாக இடம்பெற்ற வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வ.இ.நடனசிகாமணியும் மற்றும் சங்க உறுப்பினர்களும் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது. (க-7)



புன்னாலைக்கட்டுவன் அரசினர் த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

மாணவர் தலைவர் ஒருவர் ஒலிம்பிக் தீபம் ஏற்றுவதைப் படத்தில் காணலாம். பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் சிவில் பொறியியலாளர் த.முருகநேசன், சிறப்புவிருந்தினர்களில் ஒருவரான கிராம அலுவலர் வே.சம்பந்தநாதன் மற்றும் பாடசாலை அதிபர் சி.மணியம் ஆகியோர் ஒலிம்பிக் தீபம் ஏற்றும் நிகழ்வைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (க-7-133)



கோப்பாய் கலைவாணி கல்வி நிலையத்தின் வருடாந்தக் கலைவிழா அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வ.ஆறுமுகம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் நிலைய நிர்வாகி சி.சிவருபன், ஓய்வுபெற்ற ஆசிரியர் எஸ்.துரைராஜா ஆகியோர் காணப்படுகின்றனர். (க-7-10)

# குடாநாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து இயங்கத்தான் வேண்டுமா?

## பொதுமக்கள் எழுப்பும் கேள்வி

செய்திக் கட்டுரை
பொ.இராஜேஸ்வரன்

ஒரு காலத்தில் பொதுமக்களின் நல்லெண்ணத்தை முற்றுமுழுதாக பெற்றிருந்தவை குடாநாட்டு கூட்டுறவுச் சங்கங்கள். அதிலும் நடுத்தர மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களின் துயர் துடைக்க வென்றே அந்தக்கால கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வந்ததாக பலர் இப்போதும் கூறுவதை கேட்கமுடிகிறது.

இதேசமயம், கோடீஸ்வரக் குடும்பம் கூட கூட்டுறவுச் சங்கக் கடையில் பொருள் வாங்கத் தொடங்கினால் அந்தக் குடும்பம் விரைவில் ஏழ்மையாகி விடுமென்று இன்று கேலி பேசப்படுகிறது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக கூட்டுறவுச் சங்கங்களின் நற்பெயர் ஆகிவிட்டதை அனுபவங்கள் நமக்கு உணர்த்தின.

இன்று குடாநாட்டில் நிவாரணம் என்றால் மட்டுமே கூட்டுறவுச் சங்கக் கடைகளை மக்கள் நாடும் நிலை தோன்றியுள்ளது. மண்எண்ணெய் தட்டுப்பாட்டின்போதும் அந்த விநியோகத்திலும் இந்த சங்கங்கள் ஈடுபட்டிருந்தன. அதில் கூட கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வாறு செயற்பட்டன என்பதற்கு ஒரு சம்பவத்தை உதாரணம் காட்டலாம்.

### நிவாரண விநியோகம்தான் அவற்றின் முழுநேரப் பணியா?

சில வாரங்களுக்கு முன்னர் திருநெல்வேலிப் பகுதியில் ஒரு கூட்டுறவுச் சங்கக் கிளையில் குடும்பப் பெண் ஒருவர் மண்எண்ணெய் வாங்கவெனச் சென்றாராம். அவரும் மண்எண்ணெய்க்காக சங்கத்துக்குப் பல தடவைகள் நடையாய் நடந்து விட்டார். ஆனால் இன்று போய் நாளை வா! கதைதான். இறுதியாக வெறும் 2 லீற்றர்கள் மட்டும் கொடுக்கப்பட்டது - மிகுதி பிறகு எனக் கூறப்பட்டது.

ஆக மொத்தத்தில் நிவாரணம் என்ற ஒன்று மட்டுமே - தரமற்றதாக இருந்தாலும் - மக்களுக்கு தொடர்ந்து வழங்கப்படுகிறது கூட்டுறவுச் சங்கங்களால்.

இந்த சம்பவத்தை பார்த்தபோது இந்தக் கூட்டுறவுக் கடைகள் என்ன நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டன? இப்போது எப்படி இயங்குகின்றன? என்று பலவித ஐயங்கள் நம் மனதில் எழுந்தன.

கூட்டுறவுச் சங்கங்கள் வெறும் நிவாரண விநியோகக் கடைகளாக மட்டுமே இன்று செயற்படுவதாக பொதுமக்கள் தரப்பிலும் பலர் விசனம் தெரிவித்தனர்.

#### தனியாருடன் போரிட முடியாது

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதற்காக இப்படியாகின என்ற வினாவிற்கு விடை தேடி நாம் முதலில் கூட்டுறவு ஆணையாளர் செ. கனகசபாபதியை அணுகியபோது அவரின் தொனி பரிதாபகரமாக இருந்தது.

அரசின் நிவாரண விநியோகத் திட்டத்தில் கிடைக்கும் ஒரு பகுதி லாபத்தால்தான் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று ஓரளவிற்காவது சமாளித்து இயங்க முடிகிறது என்றார்.

தற்போது தனியாரிடமே சங்கங்கள் பொருள்களை வாங்கி விற்கின்றன. தனியாருடன் சங்கங்கள் மோதினால் அது 'யானையை எலி எதிர்த்த கதை'யாகி விடுமெனக் குறிப்பிட்ட அவர் சில அண்மைக்கால சம்பவங்களையும் தனது கருத்துக்கு ஆதாரங்களாக முன்வைத்தார்.

அண்மையில் சீனி விலையில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகளை நாம் மறந்திருக்க முடியாது. கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் சீனி கிலோ 44 ரூபாவிற்கு விற்கும்படி பணிக்கப்பட்டு ரூபா 42.50 சதத்திற்கு சங்கங்களிற்கு வழங்கப்பட்டது.

ஆனால் அதேநேரம் தனியார் கடைகளில் சீனி கிலோ 42 ரூபாவிற்கு தாராளமாகக் கிடைத்தது. இது கூட்டுறவுச் சங்கங்கள் மீது பொதுமக்கள் எரிச்சலுற ஏதுவாக அமைந்தது.

இது இவ்வாறாக இருக்க கடந்த தை மாதம் பொங்கலுக்குரிய பொருள்களை கொழும்பிலிருந்து கொண்டு வந்து விற்பனை செய்யப்படாமையும், பொங்கலுக்குரிய அரிசி, அவல், சர்க்கரை, கடலை போன்றவற்றை தனியாரைவிட கூடிய விலைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்வதையும் நினைவூட்டவேண்டியுள்ளது.

தனியார் கடைகளில் தைமாதம் பொங்கல் பொருள்கள் விற்கப்பட்ட விலை விவரம் வருமாறு:-

சர்க்கரை நல்ல தரமானது 55 ரூபா (கிலோ)

கடலை (கொண்டல்) கிலோ 85 ரூபா.

அவல் கிலோ 55 ரூபா.

அரிசி (சிவப்பு பச்சை) நல்ல தரம் கிலோ 45 ரூபா.

இதேவேளை சங்கக்கடைகளில் சர்க்கரை கிலோ 60 ரூபாவாகவும் கடலை (கொண்டல்) கிலோ 90 ரூபாவாகவும், அவல் 65 ரூபாவாகவும் அரிசி கிலோ 49 ரூபாவாகவும் இருந்தன.

#### திட்டமிடப்பட்ட சதி

கூட்டுறவுச் சங்கங்களின் இந்தப் போக்கிற்குக் காரணம் என்ன என்ற கேள்வியை யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தை அணுகியபோது அவர் பல விடயங்களை எமக்குச் சுட்டிக் காட்டினார்.

கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியை விரும்பாத ஒருசில தனியார் வர்த்தகர்களின் 'சதி' நடவடிக்கைகளினாலேயே கூட்டுறவுத்துறைக்கு இப்படியான அவப்பெயர் ஏற்பட்டதென குண்டைத் தூக்கிப்போட்டார் அவர்.

அப்படி என்ன விரும்பத்தகாத நடவடிக்கைகள்? 'கூட்டுறவுச் சமாசம் பொருள்களை கப்பலில் எடுத்து வருவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. வேண்டத்தகாத சில தாமதங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால் தனியார் வர்த்தகர்கள் பல நெளிவு சுழிவுகளை கையாளக் கூடிய சுதந்திரமுடையவர்கள். நாம் இப்படிச் செயற்படமுடியாதவாறு கூட்டுறவு அமைப்பு விதிகள் கட்டுப்படுத்துகின்றன. இதனால் நாம் கொழும்பிலிருந்து பொருள்களை எடுத்துவருவதில் பின்னடைவுகள் ஏற்படுவதுடன் அவற்றின் விலையிலும் மாற்றங்களை செய்யமுடியாத நிலையில் இருக்கின்றோம் என்றார் சமாசத் தலைவர்.

#### அரசியல் செல்வாக்கு

யாழ்ப்பாணத்தில் உள்ள குறிப்பிட்ட சில வர்த்தகப் புள்ளிகள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி சில பொருள்களை இங்கு தருவித்து அவற்றின் விலையை கூட்டுறவு சமாசம் நிர்ணயித்த விலையிலும் குறைத்து நிர்ணயித்து விற்பனைக்கு விடும்போது பழி எம்மீது விழுகின்றது என்று கவலைப்பட்டார் சிவஞானம்.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் குடாநாட்டுக்கு பொருள்களை கொண்டு வருவதற்கு ஏற்படும் 'அனைத்து வித' செலவுகளுக்கும் கூட்டுறவு சமாசம் சிட்டைகளுடன் கணக்கு காட்டவேண்டிய விதிமுறைக் கட்டாயம் உள்ளது. ஆனால் தனியார் வர்த்தகர்கள் எதுவித கணக்குமின்றி செலவுகளைச் செய்து பொருள்களைக் கொண்டுவருவது நடைமுறைச் சாத்தியமாகிறது.

இதனாலேயே கொழும்பிலிருந்து பொருள்களை கொண்டுவரும் நடவடிக்கையை மேற்கொள்ள சமாசத்தால் முடியாதுள்ளதாக சமாச வட்டாரங்கள் கூறுகின்றன. ஆனால், சமாசம் தனியாக ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு மூலம் கொழும்பிலிருந்து பொருள்களை தருவித்து, பின்னர் தனியாருக்குப் பதிலாக, அந்த குழுவிடம் பொருள்களை வாங்கலாமே என்றும் சிலர் குரல் எழுப்புகின்றனர்.

கொழும்பிலிருந்து பணம் செலவு செய்து பொருள்களை இறக்கும் தனியார் வர்த்தகர்கள், உள்ள விலையை விட பல மடங்காக அப்பொருளின் விலையை அதிகரித்து பொதுமக்களின் தலையில் தனியார் வர்த்தகர் சுமத்திவிட முடிகிறது என்று சுட்டிக் காட்டினார் சமாசத் தலைவர். இதற்கு எடுத்துக்காட்டாக அவர் கூறியதாவது:-

எமது சங்கம் ஒரு வர்த்தக நிலையத்தில் சன்லைற் சவர்க்காரம் (பெட்டியாக) ஒன்று ரூபா 16.25ற்கு கொள்வனவு செய்தது. ஒரு வாரத்தின் பின்னர் அந்த தனியார் வர்த்தகர் அதே சவர்க்காரத்தின் விலையை ரூபா 17.08ற்கு உயர்த்தி விட்டார்.

இதற்கு தீர்வு காணவேண்டுமானால் பாதை திறக்கப்பட்டால் சமாசம் தமது லொறிகளை கொழும்புக்கு அனுப்பி பொருள்களை நியாயமான விலையில் இங்கு கொண்டு வந்து விநியோகிக்கக் கூடியதாக இருக்கும்.

வியாபாரத்தில் இலாபம் ஈட்ட வேண்டும்தான் ஆனால் அந்த இலாபம் நீதியானதாக இருக்கவேண்டும். பொதுமக்களை சுரண்டும் நோக்காக ஒருபோதும் இருக்கக்கூடாது என வலியுறுத்தினார் சிவஞானம்.

#### நஷ்டம் அதிகம்

வியாபார போட்டிகளால் மட்டுமன்றி அண்மைக்கால போர் அனர்த்தங்களினாலும் கூட்டுறவுச் சங்கங்கள் பலத்த அடிவாங்கியுள்ளது என்கிறார்கள் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள். உணவு ஆணையாளருக்கு செலுத்தவேண்டிய கடன்தொகை பெரும் சுமையாகவே பல சங்கங்களுக்கு தற்போது இருந்து வருகின்றது. ஊழியர்களுக்கான வேதனத்திற்காக ஏற்கனவே வைப்பிலிருந்த தொகையையும் சங்கங்கள் கரைத்து விட்டன. போர் அனர்த்தங்களினால் யாழ். மாவட்டத்தில் உள்ள 23 கூட்டுறவுச் சங்கங்கள் 50 கோடி ரூபா நஷ்டத்தை அடைந்துள்ளன எனக் கூறப்படுகிறது.

அவற்றின் விவரம் வருமாறு:-

☆ யாழ்ப்பாணம் - 6 கோடி 22 லட்சம் ரூபா.

☆ நல்லூர் - 2 கோடி 14 லட்சம் ரூபா.

☆ தெல்லிப்பழை - 3 கோடி 50 லட்சம் ரூபா.

☆ புலோலி - 50 ஆயிரம் ரூபா.

☆ பச்சிலைப்பள்ளி - 1 கோடி 25 லட்சம் ரூபா.

☆ பண்டத்தரிப்பு - 1 கோடி 11 லட்சம் ரூபா.

☆ மானிப்பாய் - 1 கோடி 64 லட்சம் ரூபா.

☆ தென்மராட்சி மேற்கு - 1கோடி 29 லட்சம் ரூபா.

☆ ஊர்காவற்றுறை - 1 கோடி 9 லடசம் ரூபா.

☆ கட்டைவேலி - நெல்லியடி - 77 லட்சம் ரூபா.

☆ அளவெட்டி - 1 கோடி 23 லட்சம் ரூபா.

☆ வேலணை - 2 கோடி 14 லட்சம் ரூபா.

☆ புங்குடுதீவு - நயினாதீவு 2 கோடி 91 லட்சம் ரூபா.

☆ அச்சுவேலி - 3 கோடி 88 லட்சம் ரூபா.

☆ சாவகச்சேரி - 1 கோடி 38 லட்சம ரூபா.

☆ சங்கானை - 66 லட்சம் ரூபா.

☆ நெடுந்தீவு - 1 கோடி 25 லட்சம் ரூபா.

☆ நீர்வேலி - 1 கோடி 34 லட்சம் ரூபா.

☆ சுன்னாகம் - 1 கோடி 19 லட்சம் ரூபா.

☆ கொடிகாமம் - 1 கோடி 51 லட்சம் ரூபா.

☆ பருத்தித்துறை - 27 லட்சம் ரூபா.

☆ மருதங்கேணி - 43 லட்சம் ரூபா.

இவற்றைத்தவிர 7 - 11ஆம் படிச் சங்கங்களின் 11 கோடி 2 லட்சம் ரூபா நஷ்டமுமாக கடந்த 10ஆண்டுகளில் மட்டும் சுமார் 50 கோடி ரூபா மொத்த இழப்பீடு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நஷ்டங்களை ஈடு செய்வதில் கூட்டுறவுச் சங்கங்கள் விழி பிதுங்குவதாகவும், இதனால் பெரும் தொகையை உடனடியாகக் கொடுத்து பொருள்களை வாங்க முடியாமையும், கொழும்புச் சந்தைக்கு செல்லாததற்கு ஒரு காரணம் என்றும் கூட்டுறவுத் தரப்பு கூறுகிறது.

#### ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம்

கூட்டுறவுச் சங்கங்கள் இந்த நஷ்டங்களையும் குழி பறிப்புக்களையும் காரணம் காட்டி அவை என்ன நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டனவோ, அதை மறந்து செயற்படலாமா? என பொதுமக்கள் தரப்பில் வினா எழுப்பப்படுகிறது.

இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தை நினைவுபடுத்திக் கொள்வதற்காக கூட்டுறவுத் துறையில் 40 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய கோபாய் இளையதம்பி குமாரசாமியைச் சந்தித்தோம் -

அவர் கூறியதாவது:-

இரண்டாம் உலகப்போர் காலத்தின் போது மக்கள் பெரும் பட்டினியை எதிர்கொள்ளவேண்டிவந்தது. இந்த நேரத்தில் உலகின் அரிசி ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஒன்றாக பர்மா இருந்தது. அங்கிருந்தே அரிக்கன் அரிசி ஒரு மூடை 6ரூபாவுக்கு இங்கு கொண்டுவரப்பட்டது. போரினைக் காரணம் காட்டி பர்மிய வியாபாரிகள் லாபம் அடையும் நோக்குடன் அரிசியை பதுக்கி வைத்து தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலையை அதிகரித்து விற்பனை செய்தனர். அப்போது தான் வியாபாரிகள் இந்த பதுக்கல் மற்றும் லாபம் தேட முனையும் தந்திரம் பற்றி உலகில் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது. இதன் விளைவு எந்த நாட்டிலும் இப்படியான பதுக்கல் சந்தை வியாபாரம் ஏற்படக் கூடாது என்ற நோக்கிலும் பங்கீட்டு அடிப்படையில் அனைவருக்கும் பொருள்கள் கிடைக்கவேண்டும் என்ற நோக்கிலும் 1944ஆம் ஆண்டில் சர்வதேசரீதியில் கூட்டுறவுப் பண்டகசாலை இயக்கம் ஆரம்பமாயிற்று. இலங்கையிலும் இது நடைமுறைப் படுத்தப்பட்டது.

கிடைக்கும் பொருள்களை சமபங்கீடு செய்து மக்களுக்கு நியாய விலையில் தட்டுப்பாடு இன்றி கிடைகச் செய்யும் வகையில் கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைக்கப்பட்டன.

பண்டகசாலை 1945இல் நாட்டின் பெரும் பிரிவுகள் தோறும் சமாசம் என அமையப்பெற்றது. யாழ்மாவட்டத்தில் யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம், வலிகாமம் கிழக்கு, வலிகாமம் வடக்கு, வடமராட்சி கிழக்கு என பிரிவுகள்தோறும் பண்டகசாலையின் சமாசங்கள் அமையப்பெற்றன.

1954இல் இந்த சமாசங்கள் கோயில்பற்றுக்கள் தோறும் கூட்டுறவு மொத்த பண்டகசாலைகள் என்ற பெயரில் அமைக்கப்பட்டன. வியாபாரிகளும் இங்கு நியாய விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்யக்கூடிய நிலை இருந்தது.

காலப்போக்கில் இந்தக் கூட்டுறவு பண்டகசாலைகள் மூலம் யாழ். குடாநாட்டில் உற்பத்தியாகும் விவசாய மற்றும் பணப்பயிர்களின் விளை பொருள்களை ஒரு நாளைக்கு 60 ரயில்பெட்டி மூலமும் ஏனையவை லொறிகள் மூலமும் கொழும்புக்கு அனுப்பப்பட்டன. இதன்மூலம் விவசாயிகள் பெரும் லாபம் ஈட்ட கூட்டுறவுப் பண்டகசாலைகள் உதவின.

1960இல் விவசாயிகளின் நன்மை கருதி மக்கள் வங்கியின் உதவியுடன கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றினூடாக கடன்கள் வழங்கப்பட்டன. இவ்வாறு அமைக்கப்பட்டதே 1992இல யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட யாழ்.மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சிக் கூட்டுறவு சமாசம்.

தரை வழிப் பாதை தடுக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் பொருள்களை இங்கு எடுத்துவருவதில் திணறிய வேளை, அவர்களுக்கான பொருள்களை இங்கு நியாய விலையில் எடுத்துவந்து விநியோகிப்பதும், யாழ். மாவட்ட விவசாயிகளின் உற்பத்தியை சந்தைப்படுத்தலுமே இந்த சமாசத்தின் முக்கிய பணியாக அப்போது கூறப்பட்டது.

ஆனால் காலப்போக்கில் இந்தச் சமாசம் மந்தநிலையை அடைந்துவிட்டது. இதற்கு இதய சுத்தியோடு செயற்படக்கூடிய ஊழியரின்மை, தன்னலம் கருதி செயற்பட்டமை, வன்செயல்களால் சமாசத்திற்கு ஏற்பட்ட நஷ்டங்கள், நிர்வாகச் செலவுகள் அதிகரிப்பு என பல காரணங்களை அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

#### நிர்வாகச் செயற்பாடு

கூட்டுறவுத் துறையின் நிர்வாகச் செயற்பாடுதான் இத்துறையின் எழுச்சியைத் தீர்மானிப்பதாகும். ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் ஏழு பேர் கொண்ட பணிப்பாளர் சபை ஒன்று இருக்கும். இதில் தலைவர், உப தலைவர் ஆகியோரும் அடங்குவர். இப்பணிப்பாளர் சபை சங்கத்தின் நோக்கத்தைத் தீர்மானித்து அத்திட்டத்தை அமுல்படுத்தும்.

கிளைக் குழுவில் அங்கத்துவப் பணம் கட்டிச் சேர்ந்தால்போதும் என்ற நிலை சிலரிடம் காணப்படுகின்றது. ஆனால் கிளைக் குழு சங்கத்தின் சீரான நடவடிக்கைகளை முன் நகர்த்திச் செல்லவேண்டிய கட்டாடு கொண்டதாகும். இதைவிட 100 பேர் அங்கத்தவராகக் கொண்ட பொதுச் சபைக் குழுவும் இருக்கும். இந்தக் குழுவின் பணி சங்கத்தின் வருட இலக்கைத் தீர்மானித்து அந்த இலக்கை எப்படி அடையலாம் எனத் திட்டமிடலாகும்.

இவ்வாறு பலமான வரலாற்றையும நிர்வாகக் கட்டமைப்பையும் கொண்ட கூட்டுறவு இயக்கம், இலங்கையிலேயே வட பகுதியில்தான் வெற்றிகரமாக செயற்பட்டுவருவதாக தென்னிலங்கை அரசியல்வாதிகளே புகழாரம் சூட்டியகாலம் ஒன்று இருந் தது. ஆனால் இன்று இறுதி மூச்சை இழுத்துவிடத் தயாராகும் வயோதிபத் தன்மையில் காணப்படுவது வேதனை தரும் ஒரு விடயம். இவ்வாறு கூறினார் அந்தப் பெரியவர்.

#### முடிவு என்ன?

தலை தூக்க முடியாத நஷ்டங்கள், போட்டிகள், பொறாமைகள் என சந்தித்துள்ள கூட்டுறவு இயக்கம் 'மரணித்து'விடுமா அல்லது முழு மூச்சுடன் எழுந்து நிற்குமா என்பதே இன்று எழுந்துள்ள கேள்வி? பொதுமக்களும் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டில் இன்று அதிருப்தி கொண்டிருப்பதும் பெரும் துரதிருஷ்டமே.

'கடையில் நான் கடனுக்கும், குறைந்த விலையிலும் சாமான் வாங்குவேன். ஆனால் இந்தச் சங்கக் கடைக்காரன் கடனுக்கும் தரமாட்டான் தரமானதையும் தரமாட்டான் விலையும் குறைக்கமாட்டான். உதுகள் சங்கக் கடைகளில்லை; நிவாரணக் கடைகள் மட்டுமே" இதுதான் குடாநாட்டு மக்களின் முடிவாக உள்ளது.

இந்த எண்ணத்தை மாற்றி, 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற பெருமையை காப்பாற்றவேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்டவர்களின் கையிலேயே உள்ளது.

★

### தற்போதைய விலை நிலைவரம் இது

| | | தனியார் கடை | கூட்டுறவுச் சங்கக்கடை |
|---|---|---|---|
| | | ரு. ச. | ரு. ச. |
| சீனி | (ஒருகிலோ) | 40.00 | 43.00 |
| மா | (ஒருகிலோ) | 23.00 | 22.75 |
| சம்போ | (ஒன்று) | 5.00 | 5.50 |
| சன்லைற் சவர்க்காரம் | (ஒன்று) | 16.00 | 17.50 |
| லக்ஸ் | (ஒருகட்டி) | 20.00 | 21.50 |
| அங்கர் | (ஒருபெட்டி) | 135.00 | 138.50 |
| லக்ஸ்பிறே | (ஒருபெட்டி) | 128.00 | 131.00 |
| நெஸ்டோமோல்ட் | (ஒன்று) | 172.00 | 175.00 |
| மோர்டின் | (ஒருபெட்டி) | 38.00 | 40.00 |
| சேர்வ் எக்ஸ்சல் | (சிறிது 20g) | 8.00 | 9.00 |
| மஞ்சள் பருப்பு | (1 கிலோ) | 70.00 | 75.00 |
| தீப்பெட்டி | (ஒரு டஸின்) | 26.00 | 33.00 |
| சமையல் எண்ணெய் | (லீற்றர்) | 90.00 | 110.00 |

## ஞானோதய அக்கடமி

சங்கத்தானை, சாவகச்சேரி

**A/L 2002, 2003, 2004 கலை, வர்த்தக வகுப்புகள்**

எமது வழமையான ஆசிரியர் குழு.

| | | | |
|---|---|---|---|
| Eco. | திரு.லோகசிங்கம் | Tam. | திரு.அமரசிவம் |
| | திரு.அன்ரனி | Hi.Cul. | திருமதி சுதமதி |
| Bu.Study | திரு.பசீல் | Log. | திரு.ஜெயசுரேஸ் |
| Acc. | திரு.பார்த்திபன் | Geo. | திரு.ராஜன் |
| App. | திரு.தவசேகர் | Eng. | Mr. BRITTO |

மீண்டும் தென்மராட்சியில் 01.03.2002இல்

அனைத்து வகுப்புகளும் ஆரம்பமாகிவிட்டன!

☆ அனுமதிகளை உடனடியாகப் பெற்றுக்கொள்ளவும்.

(1265) - நிர்வாகி.


## மணிவிழா வாழ்த்து



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும் மூத்த புவியியற் பேராசிரியரும், கல்விமானுமாகிய பேராசிரியர் கலாநிதி

**பொ.பாலசுந்தரம்பிள்ளை**

அவர்கள் 10.03.2002 அன்று மணிவிழாக் காண்பதையிட்டு புவியியற்றுறையினர் பேருவகை அடைகின்றனர். அவரும் அவர் குடும்பத்தினரும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகம். (1279) - புவியியற்றுறையினர்.


## விற்பனையில் முன்னணியில் திகழும்

## கோபே (KOBE) அன்டனா பூஸ்டர்

(மின்வலு பாதுகாப்புக் கொண்டது)

3 வருட உத்தரவாதம்

(உத்தரவாதம் நிபந்தனைக்குட்பட்டது)

உங்கள் மனங்கவர்ந்த காட்சிகளை மிகத்தெளிவாக திரைகளில் பார்த்து மகிழுங்கள்

**கோபே என்று கேட்டு வாங்குங்கள்**

**போலிகளை கண்டு ஏமாறாதீர்!!!**

**Nippon Television Cables**

Five Models

| | | |
|---|---|---|
| 3C2V - 0.12 x 32 | 2 Types | RG6U |
| 3C2V - 0.12 x 48 | | RG58 |
| | | RG213 |
| 5C2V - 0.12 x 48 | 3 Types | (Communication Cables) |
| 5C2V - 0.12 x 64 | | |
| 5C2V - 0.12 x 80 | | |

All T.V. Accessories Under One Roof (C/20645)

**LANKA NIPPON**

No.18, Keyzer St. Colombo-11 Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc Colombo-04. Tel:589992.

AVAILABLE ISLAND WIDE

நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்


## நேரக் கணிப்பாளர் இல்லாததால் பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம்,மார்ச்4

கொடிகாமம் பஸ் நிலையத்தில் நேரக் கணிப்பாளர் ஒருவர் சேவையில ஈடுபடுத்தப்படாததினால் இப்பகுதி பயணிகள் பெருஞ்சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

தென்மராட்சிப் பகுதிகளிலிருந்து வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளுக்குச் செல்லும் பயணிகளில் கணிசமானோர் கொடிகாமம் பஸ் நிலையத்தையே பயணத் தேவைக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளிலிருந்து மிருசுவில், கொடிகாமம் பகுதிகளுக்கு தற்சமயம் கணிசமான பஸ் சேவைகளை வடபிராந்திய போக்குவரத்துச் சபை நடத்தி வருகின்றது.

எனினும் இங்கு ஒரு நேரக் கணிப்பாளரை வடபிராந்திய போக்குவரத்துச் சபை கடமைக்கு அமர்த்தவில்லை. இதனால் பஸ் சேவைகளுக்கான நேரங்களை அறிந்துகொள்ள முடியாதிருப்பதாகவும், பஸ்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னரே புறப்பட்டுச் செல்லும் சம்பவங்கள் இப்பகுதியில் அடிக்கடி நிகழ அது ஏதுவாக விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-15)

## அரங்கியல் கண்காட்சி

யாழ்.திருமறைக் கலாமன்றம் நடத்தும் நாடக அரங்கியற் கண்காட்சி நாளை செவ்வாய்க்கிழமை 9மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 7ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

மன்ற அரங்கில் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியில் நாடக அரங்கியல் சார்ந்த காட்சி விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்கள் உட்பட ஆர்வலர்கள் அனைவரும் இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டு பயனடையுமாறு யாழ்.திருமறைக் கலாமன்றம் கேட்டுள்ளது. (க-6)

## தாச்சிப் போட்டி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் ஆகியன தமது 50ஆவது ஆண்டு நிறைவு பொன்விழாவை முன்னிட்டு நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவாலி தென்றல் வி.கவும் சுன்னாகம் கலைவாணி வி.கவும் பங்குபற்றுகின்றன. (க-ரி)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலை கால் அவியல்,
சரும நோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு, கருவழிதல்,
மகப்பேறின்மை, குழந்தை
வைத்தியம், வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபலமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்: (792)

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்.கிளை

## பொதுக்கூட்டமும் தேர்தலும் - 2002

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கொழும்புத் தலைமையக செயலாளர் நாயகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவும், புதிய யாப்பின் பிரகாரமும் கிளையின் பொதுக் கூட்டமும், தேர்தலும் பின்வருமாறு நடைமுறைப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**நியமனப்பத்திரம் கோரும் பதவிகள்**

**தலைவர், உப தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாகக் குழு உறுப்பினர் - 06**

*நியமனப்பத்திரங்கள் வழங்கல்:-* 18.03.2002 - 22.03.2002 (முற்பகல் 10.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை)

*(ஒரு நியமனப்பத்திரம் ரூபா 250/- செலுத்தி யாழ். கிளையில் பெற்றுக்கொள்ளலாம்)*

*நியமனப் பத்திரங்கள் யாழ். கிளையில் ஏற்றுக்கொள்ளல்:-* 25.03.2002 (மு.ப.9.30 மணிமுதல் பி.ப.2.00 மணிவரை)

*பொதுக்கூட்டமும் தேர்தலும்:-* 21.04.2002 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணி

*நடைபெறும் இடம்:-* இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தலைமையகம், 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

இந்த அறிவித்தலை பொதுக்கூட்டத்திற்கான முன்னறிவித்தலாக ஏற்றுக்கொள்வதுடன் மேலதிக விவரங்களை பிரிவுகளில் அல்லது யாழ். கிளையில் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

2002.03.02 (சி-20933) - **கௌரவ செயலாளர்.**

பனை அபிவிருத்திச் சபை - திக்கம் வடிசாலை

## கூறுவிலை திறந்து பரிசீலித்தல்

யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் பிரசுரமாகிய பாதுகாப்பு அறை கூறுவிலை கோரலும், பாரிய மரக் கொள்கலன்களை அதற்குரிய அடித்தளங்களில் தூக்கிவைத்தல் கூறுவிலை கோரலும், எதிர்வரும் 06.03.2002 புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு சபையின் தலைமையகம், 53, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் திறந்து பரிசீலிக்கப்படும். கூறுவிலை சமர்ப்பித்தோர் சமுகமளிக்கவும்.

பனை அபிவிருத்திச் சபை, தலைமையகம், *53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*

பொ.சிவபாதம், *தலைவர்.* (சி-20929)

## முதலாவது வருட நினைவஞ்சலி



பிறப்பு 19 ◊ 06 ◊ 1930

இறப்பு 14 ◊ 03 ◊ 2001

## திருமதி பூமணி அன்னலிங்கம்

பண்போடும் பாசத்தோடும் எமை வளர்த்ததாயே!
உன்னோடு வாழ்ந்த நாட்களை உள்ளம் மறக்குமா?
ஆண்டு ஒன்று உருண்டோடினாலும் ஆசைமுகம்
கண்டு எம்மனதில் நின்று நிழலாடுகின்றதே!

*மஞ்சத்தடி, இணுவில்.* (1101) - அன்புக் கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## ஓராண்டு நெஞ்சகலா நினைவலைகள்



மலர்வு 15 - 07 - 1927

உதிர்வு 13 - 02 - 2001

## அமரர் கார்த்தார் சின்னத்தம்பி

திதி: அபரபக்க ஷஷ்டி

ஓராண்டு ஓடிக்கழிந்ததப்பா - இன்று
ஓயாது வாடித் துடிக்கின்றோம் - ஒன்றாய்
பார்தனனில் உங்கள் இனிய முகம் காணாது
பெருந்துயரங் கொண்டே வாடுகின்றோம் - அப்பா!
சீராக எம்மை உலகினிலே வாழவைத்த
பெருமை மிக்க அப்பாவே பிரிந்தும் ஏன் சென்றீர்?
ஆறாத துயரத்தில் வாடுகின்ற எமக்கு
ஆறுதலைத் தந்திடவே அவனி தன்னில் வாரீர்!

நிரந்தர முகவரி: *கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.*

தற்காலிக முகவரி: *ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.*

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (1270)


# YOGI HOME SCIENCE ACADEMY

வட்டுக்கோட்டையிலும், யாழ்ப்பாணத்திலும் குறுகியகால புதிய வகுப்புகள் மார்ச் 9ஆம், 11ஆம் திகதிகளில் ஆரம்பமாகவுள்ளன.

1. இலகுவழித் தையல் முறைகள் 2. கேக் ஐசிங் 3. சமையற்கலை
4. மேலைத்தேய ஐசிங் அலங்காரங்களும், மாச்சிபன் மலர் அலங்காரங்களும் (Fondant Icing Structures & Sugar Flowers)
5. முக ஒப்பனையும், தலை அலங்காரங்களும் (15 வகுப்புகள் மட்டும்)
6. பூக்கள் தயாரித்தலும், அலங்கரித்தலும் 7. துணியில் வர்ண அலங்கரிப்பு (Fabric Paintings - 12 வகுப்புகள் மட்டும்)

*யாழ்ப்பாணத்தில்:* 09.03.2002 அன்று.

*வட்டுக்கோட்டையில்:* 11.03.2002 அன்று.

லீலா இரட்ணசபாபதி
"திருமகள் வாசம்"
*பிரதான வீதி,*
(வட்டு.தபால் நிலையத்திற்கு அருகில்)
*வட்டுக்கோட்டை.*

இரு இடங்களிலும் சேரவிரும்பும் மாணவிகள் யாழ்ப்பாணத்தில் உடன் தொடர்புகொள்ளவும்:
73, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக) (1277)

# 1995இல் யுத்தநிறுத்தம் முறிந்ததை ஜனாதிபதி மறைத்ததால் படையினருக்கு பெரும் இழப்பு!

## கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பி. தெரிவிப்பு

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஜனாதிபதி இன்று சுதந்திரமாக வீதியில் இறங்கிக் கூச்சலிடுகிறார்.

1995ஆம் ஆண்டு மார்ச் 28ஆம் திகதி அப்போதைய யுத்தநிறுத்தத்தைக் கைவிடுவதாக இருவாரங்களுக்கு முன்னர் பிரபாகரன் அறிவித்திருந்தார். இந்த அறிவித்தலை இராணுவத்துக்குத் தெரிவிக்காமல் ஜனாதிபதி மறைத்தார். இதனால் இராணுவத்திற்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. ஜனாதிபதிக்கு சுதந்திரமாக நடமாட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

- இவ்வாறு கொழும்பு மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். ஜனாதிபதி விடுத்துள்ள அறிக்கைக்குப் பதிலளிக்கும் விதத்தில் விடுக்கப்பட்டுள்ள அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

ஒரு கடிதத்தின் மூலம் தமக்கு ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான ஒப்பந்தத்தை செயலிழக்கச் செய்யலாம் என ஜனாதிபதி ஜா-எலையில் வைத்துக் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அவருடைய சகல அறிவித்தல்களையும் ஜனாதிபதி மாளிகையில் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள அறையில் வைத்தே தெரிவித்துவந்தார். இது நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரியும்.

ஆனால் தற்போது ஜா-எலைக்கு மட்டுமல்ல மரியகடைக்குச் சென்றும் பகிரங்கமாக அவரால் உரையாற்ற முடியும். தற்போது அமுலில் உள்ள யுத்தநிறுத்தம் காரணமாகவே அவருக்கு அப்படியொரு வாய்ப்புக் கிட்டியுள்ளது.

அவருக்கு மட்டுமல்ல முழுநாட்டு மக்களுக்கும் அமைதியாக வாழக்கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது. அதை அவர் மறந்துவிட்டே இதுபோன்ற அறிவித்தல்களை விடுக்கின்றார். அவரது தகுதிகாண் அரசாங்க நண்பர்களான ஜே.வி.பியினரின் ஆலோசனையே இதற்குக் காரணம் என்று கெட்டகொட தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ம)

# சமாதான செயற்பாடுகள் காரணமாக திருமலை வழமைக்குத் திரும்புகிறது

திருமலை,மார்ச்4

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திருமலைப் பிரதேசத்தில் பல வருடங்களாக மக்களை இரவில் பயமுறுத்திவந்த பாரிய குண்டுச்சத்தங்கள் ஓய்ந்துவிட்டன. மக்களின் வாழ்க்கை வழமைநிலைக்குத் திரும்பியிருக்கிறது.

இப்பிரதேச மக்கள் அச்சமும் ஐயமும் இன்றி தங்களது அன்றாட வாழ்க்கையை நடத்துகின்றனர். திருமலை - கொழும்பு இரவு நேர பஸ் சேவை மீண்டும் ஆரம்பமாகி இருக்கின்றது.

திருகோணமலையின் வரலாற்று ரீதியான மற்றும் புகழ்பெற்ற இடங்களைப் பார்வையிடுவதற்காகவும் வணக்கத்தலங்களைத் தரிசிப்பதற்காகவும் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் வருகின்றனர். இவர்களில் உள்ளூர் உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

திருமலை நகரத்தில் இருந்து எட்டு மைல்களுக்கு அப்பால் கிண்ணியா வெந்நீரூற்றுக்கள் இருக்கின்றன. இவைகளைக் காண்பதற்காக ஏராளமான மக்கள் அங்கு செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

உள்ளூர், வெளிநாட்டுப் பயணிகளின் வருகை அதிகரித்திருப்பதன் காரணமாக சுற்றுப்புறங்களில் சிறு வியாபாரக் கொட்டகைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. வியாபாரிகளின் கைகளில் பணப்புழக்கம் அதிகரித்திருக்கிறது.

புகழ்பெற்ற நிலாவெளி கடற்கரையைக் காண்பதற்கும் அதில் குளிப்பதற்கும் உல்லாசப்பயணிகள் திரண்டு வருகின்றனர்.

இப்பகுதி உல்லாசப் பயண ஹோட்டல்கள் இப்போது மீண்டும் திறக்கப்பட்டிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

சேருவில, புனித பூமி மற்றும் வெல்கம ரஜமகா விகாரை ஆகியவற்றைத் தரிசிப்பதற்கும் கோணேஸ்வரக் கோயில் பூஜை வழிபாட்டுக்காகவும் ஏராளமான மக்கள் வந்த வண்ணமுள்ளனர். (ம)

### சாவகச்சேரிப் பகுதியில்

# மீளக்குடியமரும் மக்களுக்கு தென்னை நாற்று விநியோகம்

யாழ்ப்பாணம்,மார்ச்4

தென்மராட்சிப் பகுதியில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு கமநல கேந்திர நிலையங்களினால் இலவசமாக தென்னை நாற்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி, கைதடி ஆகிய கமநல கேந்திர நிலையங்களினால் நாளை செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இவை விநியோகிக்கப்படவுள்ளன.

அரசின் நூறு நாள் வேலைத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படவுள்ள இக்கன்றுகள் குறுகிய காலத்தில் பயன்தரக்கூடியன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கன்றுகளைப் பெற விரும்புபவர்கள் தமது பகுதி விவசாய சம்மேளனங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பெரும்பாக உத்தியோகத்தர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கைதடி கமநல கேந்திர நிலையத்தில் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ள நாள்களும், பிரதேசங்களும் முறையே வருமாறு:-

5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை - சந்திரபுரம், மட்டுவில், நுணாவில், மட்டுவில் மத்தி, மட்டுவில் தெற்கு, கைதடி நுணாவில்.

6ஆம் திகதி புதன்கிழமை - கைதடி வடக்கு, கைதடி தெற்கு, கைதடி தென்கிழக்கு, கைதடி கிழக்கு.

7ஆம் திகதி வியாழக்கிழமை - கைதடி மத்தி, கைதடி மேற்கு, நாவற்குழி கிழக்கு.

சாவகச்சேரி கமநல கேந்திர நிலையத்தில் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ள நாள்களும், பிரதேசங்களும் முறையே வருமாறு:-

6ஆம் திகதி புதன்கிழமை - மீசாலை வடக்கு, மீசாலை கிழக்கு, இராமவில் மீசாலை மேற்கு, கொடிகாமம் மத்தி, கொடிகாமம் தெற்கு.

7ஆம் திகதி வியாழக்கிழமை - இடைக்குறிச்சி, வரணி, இயற்றாலை, வரணி வடக்கு, கரும்பைக்குறிச்சி, நாவற்காடு.

8ஆம் திகதி வெள்ளிக்கிழமை - மட்டுவில் வடக்கு, சரசாலை வடக்கு, கோவில் குடியிருப்பு, சங்கத்தானை, கச்சாய், அல்லாரை, சாவகச்சேரி வடக்கு - ஆகிய இடங்களில் இந்த விநியோகங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(ம-9-31-ரி)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்4

திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப்போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு உப அதிபர் ந.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறுகின்றது.

போட்டியின் முடிவில் நடக்கும் பரிசளிப்பு நிகழ்வின்போது, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு பரிசுகள் வழங்கப்படஉள்ளன. (ம)

★ ★ ★

யாழ்.இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மதுவரித்திணைக்கள உதவிஆணையாளர் சி.சிவானந்தன் கலந்துகொள்வார். (க-6)

★ ★ ★

ஊரெழு கணேச வித்தியசாலையும் ஊரெழு சி.சி.த.க பாடசாலையும் இணைந்து நடத்தும் இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 1.30 மணிக்கு அதிபர் இ.குலசிங்கம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறுகின்றன.

இந்நிகழ்வுகளிற்கு முதன்மை விருந்தினர்களாக யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரனும் கோப்பாய்க் கோட்ட கல்வி அதிகாரி இசிவஞானசுந்தரமும் இணை விருந்தினர்களாக சுன்னாகம் இலங்கை வங்கி நிர்வாக உத்தியோகத்தர் த.தர்மஜெயசூரியா, உரும்பிராய் அணி பாடசாலை முதல்வர் அசுஸ்வரநாதன் ஆகியோர் கலந்துகொள்வர்.

# மாங்குளத்தில் நவீன வசதிகளுடன் தபால் நிலையம் விரைவில் அமைப்பு

வவுனியா மாவட்டத்திலுள்ள மாங்குளம் நகரில் சகல வசதிகளையும் கொண்ட நவீன தபால் நிலையம் விரைவில் அமைக்கப்படும்.

இது சம்பந்தமாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் பீ.ஏ.றிஸாத், அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டார். இப்பேச்சுவார்த்தையின்போது மேற்படி தபால் நிலையம் தற்போது எந்தவித வசதிகளும் இன்றித் தற்காலிகக் கட்டடத்தில் இயங்குவதாக றிஸாத் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

இதைத் தொடர்ந்து இவ்வருட நிதி ஒதுக்கீட்டில் போதிய பணத்தை ஒதுக்கி நவீன முறையில் இத்தபாலகத்தை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார், றிஸாத் எம்.பியிடம் உறுதியளித்துள்ளார். (ம)

### மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் காயம்

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் மந்திகை மடத்தடிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

மோ.சைக்கிளை ஓட்டிச் சென்றவரும், அல்வாய் மேற்கைச் சேர்ந்தவருமான போகநாதன் சுரேஷ் (வயது19) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.(ம-15)

# வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

வடக்கு - கிழக்கு பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு உதவுவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்குக் கடன் வழங்க இருக்கின்றது.

இது சம்பந்தமாக ஆராய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் நாதாவோ விேனா இலங்கைக்கு மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொள்ளவிருக்கின்றார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் இலங்கையில் சுற்றுப்பிரயாணம் மேற்கொள்வார். இவரது வருகையானது தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு ஓர் உந்துசக்தியாக அமையும் என அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

மேற்படி வங்கியின் தலைவர் தமது இலங்கை விஜயத்தின்போது வவுனியா, திம்புலாகல, நுவரெலியா மற்றும் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கே பெரும்பாலும் விஜயம் செய்வார் என ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்திருக்கிறது. (ம)


உ

விராட் விஸ்வப் பிரம்மனே நம

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 - 03 - 1957



மறைவு 24 - 02 - 2000

மாவிட்டபுரம், மடத்தடி

**அமரர் கனகசபை நித்தியானந்தம்**

திதி: மாசி அபர சஷ்டி (04-03-2002)

அன்பு முகத்தை மறக்க முடியுமா?

நினைவில் நீங்கா 2ஆம் ஆண்டில்

*நினைவுடன் அஞ்சலிக்கும்:*

மனைவி, பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள் (குடும்பத்தினர்).

தற்போதைய முகவரி:
*நீர்வேலி வடக்கு.* (1315)



**PHYSICS**
திரு. குகன் B.Sc.
A/L 2003, 2004
ஒளியியல்
4-3-2002 திங்கள் 4.00 p.m.
**BIOLOGY**
திரு.தற்பரன் B.Sc.
★ நுண்ணுயிரினவியல்
★ தொழிற்படும் தாவரம்
(தாவர இனப்பெருக்கம்)
5-3-2002 செவ்வாய்-4.30 p.m.
BARATHY
சித்தன்கேணி. (1317)



நிறைஞ்சனாஸ்
சங்கானை
விஜயகாந்த், செளந்தர்யா நடித்த
தவசி
(ரீலிஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C-30969)



ராஜா யாழ்ப்பாணம்
சேது புகழ் விக்ரம், காவேரி,
மணிவண்ணன் நடித்த
இனிய பாடல்களுடன்
காசி
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு (3 காட்சிகள்)
10.30, 2.30, 5.00 (புதிய நேரம்)



நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், ரம்பா, தேவயாணி
நடிக்க
நினைத்தேன் வந்தாய்
(ரீலிஸ்)
(இனிய பாடல்கள் நிறைந்த படம்)
காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்)
(1289)


# மரண அறிவித்தல்

## நவரத்தினம் சிவகடாட்சம்

**(வேலணை வர்த்தகர்)**

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வேலணை கிழக்கு, பஸ் கொம்பனியடியை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக வவுனியா பூந்தோட்டம் முதலாம் ஒழுங்கையில் வசித்தவருமாகிய வர்த்தகர் நவரத்தினம் சிவகடாட்சம் அவர்கள் 01.03.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம்-தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் அன்னலட்சுமியின் அன்பு மருமகனும் தயாநிதி அவர்களின் அன்புக் கணவரும் திருமதி வாசுகி சுரேஸ்குமார் (பிரான்ஸ்), கபிலேந்திரன், பாரதிதாசன், கெளதமன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சு.சுரேஸ்குமாரின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும் தளையசிங்கம், மதியாபரணம், வன்னியசிங்கம், சற்குணவதி, அமராவதி, செல்லம்மா, கண்ணம்மா ஆகியோரின் அருமைச் சகோதரனும் இலகுநாதன் (Ken.Traveles), வாமதேவன் (அதிபர், யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்), ஸ்ரீநிவாசன் (பிரான்ஸ்), திருமதி நளாயினி ரவிக்குமார் (U.K.) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2002) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் வவுனியா பூந்தோட்டத்திலுள்ள வசிப்பிடத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேலணை கிழக்கு,*
*இல.109, பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு.* (1316)

தகவல்:
சண்.வாமதேவன்
(அதிபர், யா/கோண்டாவில்
இராமகிருஷ்ண ம.வி.)

## ஏபிரகாம் அன்ரனி

**(அன்ரன் மாஸ்டர்)**

ஆனைக்கோட்டை, உயரப்புலத்தைச் சேர்ந்த ஏபிரகாம் அன்ரனி (அன்ரன் மாஸ்டர்) நேற்று (03.03.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏபிரகாம் மற்றும் அழகம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிறில் (பொலீஸ்) - தேக்கினம்மா ஆகியோரின் மருமகனும் லில்லிஆன் மேபிளின் அருமைக் கணவரும் அஞ்சலா, அஜந்தன், அமிர்தன், அனிற்றா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிலேந்திரன், டிக்மன் ஆகியோரின் சகோதரரும் ஆனந்தபேசி எமலினா, காலஞ்சென்ற ரொபின்சன் மரியகொறற்றி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் உயரப்புலம், ஆனைக்கோட்டை இல்லத்திலிருந்து இன்று (04.03.2002) திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு ஆனைக்கோட்டை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (1318)

தகவல்:
அஜந்தன் (மகன்)

# சமாதானத்தை ஏற்படுத்துவதில் விடுதலைப் புலிகள் ஆர்வம், உறுதி!

## வன்னி சென்று திரும்பிய ஆயர் தகவல்

யாழ்ப்பாணம்,மார்ச்4

நாட்டின் சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஆர்வமாகவும் உறுதியுடனும் செயற்படுவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் வன்னி சென்று திரும்பிய யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகத்திடம் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

வன்னியில் விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சுதா, புலித்தேவன் ஆகியோரைச் சந்தித்து ஆயர் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின் போது யுத்த நிறுத்தத்துக்கும் சமாதான முன்னெடுப்புக்களுக்கும் வழிவகுக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்டமைக்காக விடுதலைப் புலிகளுக்கு ஆயர் நன்றி தெரிவித்தார்.

சமாதானத்தை நோக்கிய பாதையில் ஏற்படும் தடைகளைக்கண்டு பின்வாங்காமல் நிரந்தர சமாதானத்துக்காக உழைக்கும்படி விடுதலைப் புலிகளிடம் ஆயர் கோரிக்கையை விடுத்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்தும் அவர் புலிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடினார்.

நீண்ட காலமாகத் தொடரும் போரால் பாதிக்கப்பட்ட மக்கள்மீது அனுதாபத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும்-

அவர்களின் கஷ்ரங்கள், துன்பங்களைக் குறைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியம் என்றும் - ஆயர் புலிகளிடம் வலியுறுத்தினார்.

விடுதலைப் புலிகளால் 'ஓயாத அலைகள்' நடவடிக்கைகள் மூலம் மீட்கப்பட்ட வடமராட்சிக் கிழக்குப் பகுதியான தாளையடி மற்றும் பளை ஆகிய பகுதிகள் வரையும் சென்று ஆயர் நிலைமைகளைப் பார்வையிட்டார்.

சமாதான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரும் - வன்னிக்கு பொருள்களை எடுத்துச்செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்ட பின்னரும் கூட வன்னி மக்களின் வாழ்க்கை நிலையில் பெருமளவு மாற்றங்கள் எதனையும் காணமுடியவில்லை என்று ஆயர் தெரிவித்தார்.

கிளிநொச்சி நகரை திட்டமிட்ட முறையில் கட்டியெழுப்புவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதை தான் அங்கு அவதானித்ததாகவும் அவர் கூறினார்.

வன்னியில் இருந்து கொழும்பு திரும்பிய ஆயர் அங்கு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவையும் நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்போர்க்கையும் சந்தித்துப் பேசினார். (ம)

# சமாதான முயற்சிகளில் புலிகள் இப்போது மிகுந்த ஈடுபாடு

## லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகிறார்

கொழும்பு,மார்ச்4

புலிகள் தற்சமயம் யதார்த்தபூர்வமான நோக்கத்தை கொண்டிருக்கிறார்கள். சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக மிகுந்த ஈடுபாடு காண்பித்து வருகிறார்கள்.

முன்னாள் வெளிவிகார அமைச்சரும் ஜனாதிபதி குமாரதுங்கவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஆசிய பத்திரிகைத்துறை கல்லூரி மாணவர்களுக்கு 'ஊடகமும், இனவிவகாரக் கொள்கையும்' என்ற தலைப்பில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

சில கட்டுப்பாடுகள் இருந்த போதிலும் இந்த விடயம் தொடர்பாக புலிகளின் தலைவரின் எண்ணங்களை அறிந்துகொள்வது கஷ்ரமான விடயம். செப்ரெம்பர் மாதத்தில் அமெரிக்க நகரங்களில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்களின் பின்னர் சம்பவித்த நிகழ்வுகளின் அடிப்படையில் புலிகளின் போக்கில் மாறுதல் காணப்படுகிறது. பொ.ஐ.முன்னணி ஆட்சிக்காலத்தின்போதுதான் சமாதான நடவடிக்கைககள் ஆரம்பிக்கப்பட்டன. எனவே எந்தவித சமாதான முயற்சிக்கும் பொ.ஐ.முன்னணியினரும் ஜனாதிபதி சந்திரிகாவும் முழு அளவிலான ஆதரவை வழங்குவார்கள்.

- என்றார் கதிர்காமர். (ஐ-9)

### நோர்வேயை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரபாகரனுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமருக்கு அனுப்பிய கடிதம் தொடர்பாக பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் லொக்கு பண்டார இவ்வாறு தெரிவித்தார்.

நோர்வே அரசின் ஏற்பாட்டில் நிரந்தரப் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டம் நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தலாக அமைவதாக ஜனாதிபதி தனது கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

நோர்வேயை முதல் இங்கு அழைத்தவர் ஜனாதிபதிதான். அவரும் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரும் விடுத்த அழைப்பை ஏற்றே தனது தூதரை நோர்வே அரசு இப்பணியில் ஈடுபடுத்தியது என்று லொக்கு பண்டார தெரிவித்தார். (ஐ)

### எந்த நெருக்கடிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வற்றைச் சேர்ந்த அதிகாரிகளை சந்தித்தார்.

குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக அவர் அவர்களுடன் உரையாடினார். காங்கேசன்துறையில் முன்னரங்க நிலைகளில் உள்ள சிப்பாய்களையும் அவர் சந்தித்தார்.

பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன பின்னர் அங்கிருந்து முகமாலை, கொடிகாமம் ஆகிய பகுதிகளுக்குச் சென்று அங்கு படையினரின் முன்னணி நிலைகளைப் பார்வையிட்டார்.

பின்னர் பருத்தித்துறை படை முகாமில் சிப்பாய்களோடு அவர் மதிய போசனம் அருந்தியதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. தற்போதைய நிலைவரம் தொடர்பாக அவர் சிப்பாய்கள் மத்தியில் உரையாற்றினார்.

அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் மாரப்பன குடாநாட்டுக்கு விஜயம் செய்தது இதுவே முதல் முறையாகும்.

அமைச்சர் மாரப்பனவுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் யாழ்ப்பாணம் வந்திருந்தார். (ஐ-9)

### உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல்களுக்குத் தெரிவத்தாட்சி அலுவலர்களாகப் பணிபுரியும் அரச அதிபர்களைக் கடந்த வார இறுதியில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது அம்பாறை தவிர்ந்த ஏனைய மாவட்ட அரச அதிபர்கள் உள்ளூராட்சித் தேர்தல்களைத் தத்தமது பிரதேசங்களில் நடத்துவதில் சிக்கல்கள் உள்ளன என எடுத்துரைத்தனர்.

எனினும், அதன் பின்னரும், தேர்தல்கள் திட்டமிட்டபடி நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் அரச அதிபர்களிடம் தெரியப்படுத்தியிருக்கின்றார். எனவே உங்கள் பிரதேசங்களில் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முழு மூச்சில் செய்யுங்கள் என்றும் அவர்களை ஆணையாளர் பணித்திருக்கின்றார்.

அத்தோடு வடக்கு - கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்த அணிகளின் பெயர் மற்றும் தேர்தல் சின்னங்களோடு வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணியும் மும்முரமாக நடந்து வருகின்றது.

தேர்தல் ஆணையாளரின் பிந்திய உத்தரவும், தேர்தலுக்கான ஏற்பாடுகளும் தமிழ்க் கட்சிகளை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளன.

இந்தத் தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்ற நம்பிக்கையில் வேட்புமனுத்தாக்கலில் அசிரத்தை காட்டிய இந்தக் கட்சிகள் பிரசாரத்தை அடியோடு கைவிட்டுவிட்டன.

எதிர்பாராத விதத்தில் இந்தத் தேர்தல் ஒத்திவைக்கப்படாமல் நடத்தப்பட்டு விட்டால் எல்லாம் கோட்டை போய்விடுமே என்ற அச்சம் தமிழ்க் கட்சிகளுக்கு.

ஆனால் வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைக்கும் முடிவை தேர்தல் ஆணையாளர் பரிசீலித்து வருவதாக வேறு சில வட்டாரங்கள் தெரிவித்தன.

நேரத்துடனேயே அதனை அறிவித்தால் சம்பந்தப்பட்ட தரப்புகள் ஏதும் அதற்கு எதிராக நீதிமன்றத்துக்குப் போய் விடலாம் என அவர் கருதுகின்றார். எனவே இறுதி நேரத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி இத்தேர்தல்களுக்கான தபால் மூல வாக்களிப்பு நடைபெறவிருக்கையில் - ஒத்திவைப்புப் பற்றிய அறிவிப்பை அவர் விடுப்பார் என எதிர்பார்க்கலாம் என்றும் - அந்த வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன. (ஐ)

# பாடசாலைகளின் அபிவிருத்தியில் பழைய மாணவருக்கு கூடிய பங்கு

## விரைவில் திருத்தச் சட்டமூலம்

கொழும்பு,மார்ச்4

பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பான சட்டம் விரைவில் திருத்தப்படவுள்ளது.

கல்வி, மனிதவள அபிவிருத்தி அமைச்சர் கருணசேன கொடித்துவக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள 'கேற்வே' சர்வதேச பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் பங்குபற்றி உரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலை அபிவிருத்தியில் ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் ஆகியோரின் நேரடிப் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதே உத்தேச திருத்தத்தின் நோக்கமாகும். திருத்தச் சட்டம் ஜூன் மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் - என்றார்.

(ஐ-9)

## களுத்துறையில் 5 தமிழ் கைதிகள் உண்ணாவிரதம்

கொழும்பு,மார்ச்4

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளில் ஐவர் கடந்த மூன்று நாள்களாக உண்ணாவிரதப் போரில் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தம்மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறுகோரி கடந்த முதலாம் திகதி முதல் அவர்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சவரிமுத்து லோகநாதன், சுப்பையா சிறிதரன், சின்னப்பு செல்வராஜா, செல்லன் லிங்கரட்ணம், நடராஜா ரவி ஆகிய கைதிகளே உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபடப்போவதாக பிரதமர் உட்பட பல தரப்பினருக்கும் ஏற்கனவே அறிவித்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

### தரைப்பாதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுவாழில் பொருள்களைச் சோதனையிடுவதற்கான களஞ்சியம் அமைப்பது முதல் தடைநிலைகள் சோதனை நிலையங்கள் தங்குமிட வசதிகள் என்பவற்றை நிறுவுவதற்காகவே இந்த நிதி தேவைப்படுவதாக படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான திட்டங்கள் அவற்றுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் போன்ற விவரங்களையும் படைஅதிகாரிகள் தம்மிடம் கையளித்துள்ளதாகவும் அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார். (ம-3)

### இந்தியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று இந்திய அரசு அறிவித்திருக்கிறது.

பாலயோகியின் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் புதன்கிழமை அவரது சொந்த மாநிலமான ஆந்திராவில் அமலபுரம் தொகுதியில் முழு அரச மரியாதையுடன் நடைபெறும்.

51 வயதான பாலயோகி இந்தியாவில் வயதில் குறைந்த அரசியல்வாதிகளில் ஒருவர். இந்தியாவில் தலித் சமூகத்தில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது உறுப்பினர் என்ற பெருமைக்குரியவர். (ஐ-ம)

*(விரிவான செய்தி 3 ஆம் பக்கத்தில்)*

### வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். போரா, சமாதானமா என்பதைத் தீர்மானிப்பதற்கு இந்த ஆண்டு இறுதியானது. அதை உணர்ந்து அரசு செயற்படும். சமாதானப் பேச்சு முயற்சிகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கப்படும் - என்றும் தேரரிடம் பிரதமர் கூறினார். (ஐ)

### உடன்பாட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துவம் வகிக்கும் அரசியல் கட்சிகள் இக்குழுவை அமைக்க வேண்டும். யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யும் பொறுப்பு அக்குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். நாடாளுமன்ற உறுபபினர்களை அல்லது ஏனையோரை தமது பிரதிநிதிகளாக நியமிக்கும் சுதந்திரம் கட்சிகளுக்கு இருக்கவேண்டும்.

பிரதமரின் காரியாலயத்தின் ஊடாக யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு தகவல்களை மேற்கண்ட குழுவுக்கு வழங்கமுடியும். இந்த யோசனையை ஏற்றுக்கொண்டால் மேற்கண்ட குழுவை அமைக்கலாம்.

- இவ்வாறு பிரதமர் ரணில் தனது பதில் கடிதத்தில் யோசனை கூறியிருக்கிறார்.

(ஐ-9)


SPECIAL ENGLISH
Lectures By:-
Mr. M.A.HARI
புதிய பிரிவு ஆரம்பம்
இன்று (04.03.2002) திங்கள்
மாலை 5 மணி
Mon. Wed. - 5 p.m. - 6 p.m.
HARY'S INSTITUTE
Kondavil East, Kondavil. (1307)

இன்றைய புதிய
வீடியோ CD வெளியீடு
சரண்ராஜ், மஞ்சு
✣ அசுரப் படை
✣ ரோஜாக் கூட்டம்
அஸ்டி
எலக்ரோனிக்ஸ்
யாழ்ப்பாணம். (C/20944)

கம்பனி
2002 A/L DAY
பிரசுரக் கணக்குகள்
ஆரம்பம்: 05.03.2002
(செவ்., வியா. 10.30 a.m.)
ஆசிரியர்: இ.வின்சன்
B.B.A. (HRM Spl.)
ஸ்ரார் சுன்னாகம். (1285)

CHEMISTRY CENTRE
83, பலாலி வீதி, கந்தர்மடம்.
ORGANIC
சில பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு I 07-03 Thur. 5 p.m.
By. அன்பழகன்
(அன்பு)
"தாவர இனப்பெருக்கம்"
ஆரம்பம்: 07-03(Thur.)6.45 a.m.
"மனிதனும் சூழலும்"
Mon.,Wed. - 6.45-7.45 a.m.
By. தற்பரன் (1313)

நாளை ஆரம்பமாகின்றது!
திருமறைக் கலாமன்றம்
நடத்தும்
நாடக அரங்கியற் கண்காட்சி - 2002
DRAMA AND THEATRE EXHIBITION - 2002
(எலிசபேத் கால அரங்கு)
※ நாடக அரங்கியல் சார்ந்த காட்சி விளக்கங்கள்
※ ஷேக்ஸ்பியரின் 'மக்பெத்' ஆற்றுகை
※ ஒளிநாடா விளக்கங்கள்
காலம்: 05,06,07 மார்ச் 2002 (செவ்வாய், புதன், வியாழன் - 3 நாள்களுக்கு)
நேரம்: தினமும் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை
இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு
பிரவேசம்: இலவசம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- திருமறைக் கலாமன்றம்.
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 021-2393 இணையம்: www.cpateam.org (C/20931)

பிரத்தியேக வகுப்பு
பௌதிகவியல்
BY: Mr.Karunanithy B.Sc. (Spl.)
2003 A/L
வெப்பவியல்
ஆரம்பம்: 06.03.2002 புதன்
NIRU
கோண்டாவில்.
※ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும். (1303)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.03.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.